# 4. இடையியல்

இடைச்சொல்லின் (On Particle Words) இலக்கணத்தை உணர்த்துவதால் இவ்வியல் இடையியல் எனப் பெயர் பெற்றது. இடைச்சொல் என்பது காரணப்பெயர். 1. முன்னும் பின்னும் நிற்குமாயினும் பெரும்பாலும் இடையில் நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று என்பது சேனாவரையர் கருத்து 2. தனித்து இயங்கும் தன்மையின்றிப் பெயர், வினைகளை இடமாகக் கொண்டு நடப்பதால் இடைச்சொல் என்கிறார் தெய்வச்சிலையார் 3. பெயர்ச்சொல்லும் ஆகாது வினைச்சொல்லும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று என்று விளக்கம் தருகிறார் சங்கர நமச்சிவாயர். இவ்இடையியல் 22 நூற்பாக்களைக் கொண்டது.

**இடைச்சொல்லின் வகையும் [8] இலக்கணமும்**

420. வேற்றுமை[1] வினை[2] சாரியை[3] ஒப்பு உருபுகள்[4]
தத்தம் பொருள்[5] இசைநிறை[6] அசைநிலை[7]
குறிப்பு[8] என்எண் பகுதியின் தனித்துஇயல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல்.

[இ-ள்] இடைச் சொல்லானது 1.ஐ முதலிய வேற்றுமை உருபுகள் 2. விகுதி, இடைநிலை ஆகிய வினை உருபுகள் 3. அன், ஆன் முதலான சாரியைகள் 4. போல, புரைய முதலான உவம உருபுகள் 5. தத்தம் பொருள் உணர்த்துவன 6. இசை நிறையாக வருவன 7. அசை நிலையாக வருவன. 8. குறிப்பால் பொருள் உணர்த்துவன என்னும் எட்டு வகையினை உடையது. இது தனித்து நடக்கும் தன்மையற்றது. பெயர், வினைகளுக்கு முன்னோ பின்னோ வரும். அவ்விடங்களில் ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நடப்பதே இடைச்சொல்லின் பொது விலக்கணமாகும்.

**இடைச்சொல்லின் எட்டுவகைகள்**

1. **வேற்றுமை உருபுகள்:** பெயருக்குப் புறத்தே நின்று பொருள்களை வேற்றுமைப் படுத்தும். ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. [எ-டு]
   சாத்தனை (ஐ), சாத்தனால் (ஆல்)
2. **வினையுருபுகள்**
   அ) ஈற்றில் நிற்கின்ற விகுதிகள். அவை **அன், ஆன்** என முன் (நூ.140) கூறப்பட்டவை. [எ-டு]
   நடந்தனன் - அன்; நடந்தான் - ஆன்
   ஆ) இடையில் நின்று காலத்தைக் காட்டும் முக்கால இடைநிலைகள். வந்தான் (த்) வருகிறான் (கிறு) வருவான் (வ்) இவையும் முன் (நூ.142 - 144) கூறப்பட்டவை.

Scanned with CamScanner

**3. சாரியைகள்**

பெயர், வினைகளில் அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் அமைபவை. அவை முன் (நூ.244) கூறப்பட்டன. [எ-டு]

நடந்தனன் → அன் வினையின் அகத்துறுப்பாய் நின்றது
புளியங்காய் → அம் பெயரின் அகத்துறுப்பாய் நின்றது
மன்றம் → அம் பெயரின் புறத்துறுப்பாய் நின்றது.

**4. ஒப்பு (உவம) உருபுகள்**

அவை போல முதலாக முன் (நூ.367) சொல்லப்பட்ட எச்சங்களின் பகுதிகள். [எ-டு]

போன்றான் - போல என வினையில் அகத்துறுப்பாய் நின்றது.

**5. தத்தம் பொருள் உணர்த்துவன**

தமக்கென வரையறுக்கப்பட்ட பொருள் தருபவை. அவை ஏ, ஓ போன்றவை.

**6. இசைநிறை**

செய்யுளில் ஓசை நிறைவிக்கும் ஏ, ஓ போன்றவை.

**7. அசைநிலை**

பொருள் உணர்த்தல் இன்றி அசை நிலையாக வருபவை. [எ-டு]
யா, கா, பிற போன்றவை.

**8. குறிப்பால் பொருள் உணர்த்துவன**

ஒலி, அச்சம் போன்ற குறிப்புப் பொருளைத் தருவன. [எ-டு]
ஒல்லென - ஒலி; திடுக்கென - அச்சம்.

## இடைச்சொல்லின் இலக்கணம்

1. தனித்து நிற்கும் தன்மையின்றிப் பெயர், வினைகளுக்கு உறுப்பாய் வரும். [எ-டு]
   வந்தான் - த் - இடைநிலை (அகத்தில் நின்றது)
   அது கொல் - கொல் - இடைச்சொல் (புறத்தில் நின்றது)
2. பெயர், வினைகளுக்கு 1. முன்னும் 2. பின்னும் வரும்.
   அம்ம கொற்றா → பெயரின் முன் வந்தது
   அது மன் → பெயரின் பின் வந்தது

இடையிலும் வரும். அறி + ஞ் + அன் - 'ஞ்' இடையில் வந்தது.

3. ஒன்றோ பலவோ வரும்.
   அது கொல் - (கொல்) ஒன்று வந்தது
   அது மற்றம்ம - (மற்று, அம்ம) பல வந்தன
   இடைச்சொற்கள் இயல்பாயும் ஈறு திரிந்தும் வரும்.
   அது கொல் - (கொல்) இயல்பாய் நின்றது.
   மன்னைச் சொல் - (மன்) ஈறு திரிந்தது.



## இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் [14]

421. தெரிநிலை[1] தேற்றம்[2] ஐயம்[3] முற்று[4] எண்[5] சிறப்பு[6]
எதிர்மறை[7] எச்சம்[8] வினா[9] விழைவு[10] ஒழியிசை[11]
பிரிப்புக்[12] கழிவு[13] ஆக்கம்[14] இன்னன இடைப்பொருள்.

[இ-ள்] 1.தெரிநிலை 2. தெளிவு 3. ஐயம் 4.முற்று 5.எண் 6.சிறப்பு 7. எதிர்மறை 8. எச்சம் 9.வினா 10. விருப்பு 11. ஒழிந்த சொல் 12. பிரிநிலை 13. கழிவு 14. ஆக்கம் என்னும் பதினான்குடன் இவை போல்வன பிறவும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் ஆகும். [எ-டு]

1. **தெரிநிலை:** (இன்னது எனத் தெரிவித்தல்) ஆண்பெண் அன்று-அலி
2. **தேற்றம்:** (உறுதிபடக் கூறுதல்) உண்டே மறுமை
3. **ஐயம்:** (துணிவின்மை) ஆணோ? பெண்ணோ?
4. **முற்று:** (முழுமைப்படுத்துதல்) இருவரும் வந்தார்
5. **எண்:** (எண்ணிக்கைப் பொருண்மை) கண்ணும் காதும்
6. **சிறப்பு:** (ஒன்றுக்குரிய பெருமை) குறவரும் அஞ்சும் குன்று
7. **எதிர்மறை:** (மாறுபடுதல்) வந்தாலும் வருவான் - வாராமை குறித்தது
8. **எச்சம்:** (பிறிதொன்றைத் தொடர்புறுத்தல்) அவனும் வந்தான்
9. **வினா:** (வினவுதல் - ஐயத்தை வினவுதல்) குற்றியோ? மகனோ?
10. **விழைவு:** (விருப்பம்) வருகதில் அம்ம
11. **ஒழியிசை:** (வேறு பொருள் படுதல்) படிப்பதற்கோ வந்தாய்-
    விளையாட
12. **பிரிநிலை:** (பிரித்துக் கூறுதல்) அவனே வந்தான் (பிறரிலர்)
13. **கழிவு:** (நடந்ததற்கு வருந்துதல்) எமக்கீயும் மன்னே
14. **ஆக்கம்:** (வளர்ச்சி) பண்டு காடுமன் (இன்று வயலாயிற்று)

இன்னன (இவை போன்றவை) என்றதால் வருபவை.

சுட்டுப்பொருள் தருவன (அ,இ,உ) → அவன், இவன், உவன்
வினாப்பொருள் தருவன (எ,யா,ஆ,ஏ,ஓ) → எவன், யாவன், அவனோ
எல்லைப்பொருள் தருவன (கால, இடச் சொற்கள்) → இனிக்கூறுக,
முன் செல்க.

பன்மைப்பொருள் தருவன (தொறும், தோறும்) } வருந்தோறும் - தொழிற்பன்மை; ஊர்தோறும் - இடப்பன்மை
விகற்பப்பொருள் தருவன (ஆவது, ஆயினும்) } ஒன்றாவது, இரண்டாவது

இரக்கப்பொருள் தருவன (ஐயோ,அந்தோ,ஆ) → ஐயோ இறந்தான்
வியப்புப் பொருள் தருவன் (அம்மா,ஆ,ஓ) → அம்மா கொடிது
அச்சப் பொருள் தருவன (ஐயோ, ஆ ஆ) → ஐயோ புலி

இகழ்ச்சிப் பொருள் தருவன (சீ, சிச்சீ) → சீ எழுந்திரு
உயர்வுப் பொருள் தருவன (ந) → நக்கீரன், நப்பின்னை
பயனின்மைப் பொருள் தருவன (வாளா, சும்மா) சும்மா வந்தேன்.

Scanned with CamScanner

**ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் (6)**

422. பிரிநிலை[1] வினா[2] எண்[3] ஈற்றசை[4] தேற்றம்[5]
இசைநிறை[6] எனஆறு ஏகா ரம்மே.

[இ-ள்] ஏகார இடைச்சொல் 1. பிரிநிலை 2. வினா 3. எண் 4. ஈற்றசை 5. தெளிவு 6. இசை நிறைவித்தல் என்னும் ஆறு பொருள்களில் வரும். [எ-டு]

1. **பிரிநிலை**
அவர்களுள் இவனே கொண்டான் → பிறரிடமிருந்து பிரித்துக் கூறியதால் பிரிநிலை

2. **வினா**
நீயே கொண்டாய்? (நீயா கொண்டாய்?)

3. **எண்**
நிலனே, நீரே → நிலமும் நீரும் என எண்ணுதலால் எண்

4. **ஈற்றசை**
அறைகுவன் சொல்லே → வேறு பொருள் தராமல் இறுதியில் நிற்றலால் ஈற்றசை

5. **தெளிவு**
உண்டே மறுமை → உறுதிப்படத் தெளிந்து மொழிந்ததால் தெளிவு

6. **இசைநிறை**
ஏயே இவள் ஒருத்தி → செய்யுளில் இசையை நிறைத்து நிற்றலால் இசைநிறை.

**ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் (8)**

423. ஒழியிசை[1] வினாச்[2] சிறப்பு[3] எதிர்மறை[4] தெரிநிலை[5]
கழிவு[6] அசை நிலை[7] பிரிப்பு[8] எனஎட்டு ஓவே.

[இ-ள்] ஓகார இடைச்சொல் 1. ஒழியிசை 2. வினா 3. சிறப்பு 4. எதிர்மறை 5. தெரிநிலை 6. கழிவு 7. அசைநிலை 8. பிரிப்பு என்னும் எட்டுப் பொருள்களைத் தரும். [எ-டு]

1. **ஒழியிசை**
வாழ்வதற்கோ வந்தான் → இது வாழ்வதற்கு அன்று சாவதற்கு எனச் சொற்களைத் தருவதால் ஒழியிசை.

2. **வினா**
இதுவோ? அதுவோ? → ஐயப்பட்டு வினவும் பொருளைத் தருதலால் வினா.



3. **சிறப்பு**
உயர்வு → ஓஒ பெரியன் → இது ஒருவனுடைய பெருமையின் மிகுதியைக் காட்டுதலால் உயர்வு சிறப்பாய் நின்றது.
இழிவு → ஓஒ கொடியன் → இது ஒருவனுடைய கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால் இழிவு சிறப்பாய் நின்றது.

4. **எதிர்மறை**
அவனோ கொண்டான் → இது அவன் கொண்டிலன் என மாறான பொருளைத் தருதலால் எதிர்மறை.

5. **தெரிநிலை**
அலியை நோக்கி ஆணோ அதுவும் அன்று; பெண்ணோ அதுவும் அன்று.
இது ஆண், பெண் தன்மையற்றது என்பதைத் தெரிவித்தலால் தெரிநிலை.

6. **கழிவு**
ஓஒ உணரார் → இது நன்மை அறியாமல் செயல்பட்டுக் கெட்டவர்களுக்காக வருந்தும் பொருளைத் தருதலால் கழிவு.

7. **அசைநிலை**
கேண்மினோ → இது கேளுங்கள் என வேறு பொருள் இன்றி நிற்றலால் அசைநிலை.

8. **பிரிநிலை**
இவனோ கொண்டான் → பிறரிடமிருந்து ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

**'என', 'என்று' என்னும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் (6)**

424. வினை[1] பெயர்[2] குறிப்பு[3] இசை[4] எண்[5] பண்பு[6] ஆறினும்
எனஎனும் மொழிவரும்; என்றும் அற்றே.

[இ-ள்] என என்னும் இடைச்சொல் 1. வினை 2. பெயர் 3. குறிப்பு 4. இசை 5. எண் 6. பண்பு என்னும் ஆறு பொருள்களிலும் வரும். என்று என்னும் இடைச்சொல்லும் மேற்சொல்லப்பட்ட ஆறு பொருள்களிலும் வரும். [எ-டு]

1. **வினை**
மகன் பிறந்தான் என (என்று) → இதில் வினையொடு இயைந்தது.

2. **பெயர்**
அழுக்காறு என (என்று) → இதில் பெயரொடு இயைந்தது.

Scanned with CamScanner

3. குறிப்பு
பொள்ளென (என்று) → இதில் விரைவுக் குறிப்பொடு இயைந்தது
4. இசை
ஒல்லென (என்று) → இதில் இசை (ஓசை) யொடு இயைந்தது
5. எண்
நிலமென (என்று) நீரென (என்று) → இதில் எண்ணொடு இயைந்தது
6. பண்பு
வெள்ளென (என்று) விளர்த்தது → இதில் நிறப் பண்பொடு இயைந்தது.

**உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் [8]**

425. எதிர்மறை[1] சிறப்பு[2] ஐயம்[3] எச்சம்[4] முற்று[5] அளவை[6]
தெரிநிலை[7] ஆக்கமோடு[8] உம்மை எட்டே.

[இ-ள்] உம் என்னும் இடைச்சொல் 1. எதிர்மறை 2. சிறப்பு 3. ஐயம் 4. எச்சம் 5. முற்று 6. அளவை 7. தெரிநிலை 8. ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களைத் தரும். [எ-டு]

1. எதிர்மறை
வருதலும் உரியன் → வாராமைக்கும் உரியன் என எதிர்மறைப் பொருளைத் தந்தது
2. சிறப்பு
உயர்வு → குறவரும் மருள்வர் (வலிமையைச் சிறப்பித்தது)
இழிவு → நாயும் தின்னாது (இழிவைச் சிறப்பித்தது)
3. ஐயம்
பத்தாயினும் எட்டாயினும் கொடு → துணிவின்மையைக் காட்டியது
4. எச்சம்
இறந்தது தழுவல் → சாத்தனும் வந்தான் (முன் கொற்றன் வந்தான் என நடந்ததைக் குறித்தது)
எதிரது தழுவல் → சாத்தனும் வந்தான் (இனிக் கொற்றனும் வருவான் என நடப்பதைக் குறித்தது)
5. முற்று
மூவேந்தரும் வந்தார் → குறைவின்மையைக் காட்டியது
6. அளவை
ஒன்றும் இரண்டும் → எண்ணுதற் பட நின்றது.
7. தெரிநிலை
ஆணும் பெண்ணும் அன்று → அலியெனத் தெளிய நின்றது.
8. ஆக்கம்
பாலுமாயிற்று → அதுவே மருந்தும் ஆதலைக் குறிக்கும்.



**முற்றும்மை எச்சப் பொருள் தருதல்**

426. முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்.

[இ-ள்] மேற்சொல்லப்பட்ட பொருள்களுள் முற்றுப் பொருளில் வரும் உம் என்னும் இடைச்சொல் சில இடங்களில் எச்சப்பொருளையும் தரும். [எ-டு]

அனைவரும் வந்திலர் → சிலர் வந்தார்
பத்தும் கொடார் → சில கொடுப்பர்
முழுவதும் அறிந்திலன் → சில அறிந்துளன்

எனப் பொருள் தரும்.

**செவ்வெண்**

பெயர், வினைகளின் இடையே எண்ணிடைச் சொற்கள் மறைந்து நிற்க எண்ணி நிற்பது செவ்வெண் ஆகும்.

**எச்சவும்மை செவ்வெண்ணில் வருதல்**

427. செவ்வெண் ஈற்றதாம் எச்ச உம்மை.

[இ-ள்] எச்சப் பொருளில் வருகின்ற உம் என்னும் இடைச்சொல் செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும். [எ-டு]

கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்.

இவற்றுள் சில பெறுவாரும் உளர் எனப் பொருள் தருவது எச்சவும்மை. இது செவ்வெண்ணின் ஈற்றில் குடிப்பிறப்பும் என உம்மை பெற்று வந்துள்ளது.

**சில எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம்**

428. பெயர்ச்செவ் வெண்[1] ஏ[2] என்றா[3] எனா[4] எண்
நான்கும் தொகைபெறும்; உம்மைஎன்று எனஓடு
இந்நான்கு எண்ணும்அஃது இன்றியும் இயலும்.

[இ-ள்] பெயரிடத்தே எண்ணிடைச் சொல் மறைந்து வருகின்ற 1. செவ்வெண் 2. ஏ 3. என்றா 4. எனா + எனத் தொகாமல் (மறையாமல்) வருகின்ற எண்ணிடைச் சொற்கள் மூன்றும் ஆகிய இந்நான்கும் இத்துணைத்து என்று கணக்கிடும் எண்ணுப் பொருளில் தொகை பெற்று வரும். உம், என்று, என, ஓடு என்னும் இந்நான்கு எண்ணிடைச் சொற்களும் தொகை பெறாமலும் (பெற்றும்) வரும். [எ-டு]

சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார் → உம் மறைந்து தொகை பெற்று வந்தது (செவ்வெண்)

சாத்தனே கொற்றனே இருவரும் வந்தார் → ஏ மறையாமல் வந்தது

சாத்தன் என்றா கொற்றன் என்றா இருவரும் வந்தார் → என்றா மறையாமல் வந்தது

சாத்தன் எனா கொற்றன் எனா இருவரும் வந்தார் → எனா மறையாமல் வந்தது

இவை வழக்கில் சிறுபான்மை. தொகை பெறாமல் வந்தால் அதனை இசையெச்சங்களாகக் கொள்ளவேண்டும். செய்யுளில் தொகை பெறாமல் வந்தால் அதனைத் தொகுத்தல் விகாரமாகக் கொள்ள வேண்டும். [எ-டு]

சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று இருவர் உளர்
→ உம், என்று, என, ஒடு (இருவர் என)

சாத்தனெனக் கொற்றனென இருவர் உளர்
சாத்தனோடு கொற்றனோடு இருவர் உளர்
→ தொகை பெற்றும் வந்தன

சாத்தனும் கொற்றனும் வந்தார்
சாத்தனென்று கொற்றனென்று உளர்
சாத்தன் எனக் கொற்றன் என உளர்
சாத்தனோடு கொற்றனோடு உளர்
→ தொகை பெறாதும் வந்தன

பெயர்ச் செவ்வெண்ணிலும் உம்மைத் தொகையிலும் எண்ணிடைச் சொற்கள் தொக்கு வரும். ஆயினும் செவ்வெண், தொடர் மொழி போல விட்டிசைக்கும். உம்மைத்தொகை விட்டிசைக்காமல் ஒரு மொழி போல நடக்கும்.

**என்று, என, ஒடு என்பனவற்றிற்குச் சிறப்பு விதி**

429. *என்றும்[1] எனவும்[2] ஒடுவும்[3] ஒரோவழி*
*நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும்.*

[இ-ள்] 1. என்று 2. என 3. ஒடு என்னும் இம்மூன்று எண்ணிடைச் சொற்களும் எண்ணப்படும் பொருள்தோறும் நில்லாமல் ஓரிடத்தில் நின்றும் பிரிந்து எண்ணப்படுகின்ற பொருள்கள்தோறும் சென்று பொருந்தும் [எ-டு]

**வினை பகை என்று இரண்டு** → என்று என்பது ஈற்றில் நின்றது. அது வினை என்று பகை என்று எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

**பகை பாவம் அச்சம் பழியென நான்கும்** → பழி என்பது பழியென நின்றது. அது பகையென, பாவமென, அச்சமென, பழியென எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் அது பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடனொடு எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.



**எண்ணிடைச் சொற்கள் வினையுடன் வருதல்**

430. *வினையொடு வரினும் எண்இனைய ஏற்பன.*

[இ-ள்] எண்ணிடைச் சொற்கள் வினையொடு பொருந்தியும் வரும். அவ்விடங்களில் பெயரில் நின்ற அத்தன்மையை அப்படியே ஒத்து நடக்கும். [எ-டு]

| | | |
|---|---|---|
| மயிலாடக் குயிலாட மாமுகில் எழுந்தது | → | உம் மறைந்து நின்றது (செவ்வெண்) |
| கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் | → | உம் |
| உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் | → | என்று |
| உண்ணவென உடுக்கவென வந்தான் | → | என |
| உண்ண உடுக்க வென்று வந்தான் | → | ஓரிடத்தில் நின்று பிரிந்து கூடும் எண் |

**தில் என்னும் இடைச்சொல் [3]**

431. *விழைவே[1] காலம்[2] ஒழியிசை[3] தில்லே.*

[இ-ள்] தில் என்னும் இடைச்சொல் 1. விருப்பம் 2. காலம் 3. ஒழிந்த சொற்களை உணர்த்துதல் ஆகிய மூன்று பொருள்களைத் தரும். [எ-டு]

1. அரிவையைப் பெறுகதில் அம்ம யானே → விழைவு
   அரிவையைப் பெற வேண்டும் என்னும் விருப்பத்தைக் காட்டியது.
2. பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூரே → காலம்
   பெற்ற காலத்தில் அறிக எனக் காலத்தை உணர்த்தியது
3. வருகதில் அம்ம எம்சேரி சேர → ஒழிந்த சொல்
   வந்தால் இன்னது செய்வேன் என ஒழிந்ததை உணர்த்தியது.

**மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள் [6]**

432. *மன்னே அசைநிலை[1] ஒழியிசை[2] ஆக்கம்[3]*
*கழிவு[4] மிகுதி[5] நிலைபேறு[6] ஆகும்.*

[இ-ள்] மன் என்னும் இடைச்சொல் 1. அசைநிலை 2. ஒழியிசை 3. ஆக்கம் 4. கழிவு 5. மிகுதி 6. நிலைபெறுதல் என்னும் ஆறு பொருள்களில் வரும். [எ-டு]

1. **அசைநிலை**
   அதுமன் கொண்கன் தேரே → வேறு பொருளின்றிச் சார்ந்து நின்றது
2. **ஒழியிசை**
   கூரியதோர் வாள்மன் → வாளின் திட்பமின்மையை உணர்த்தியது

Scanned with CamScanner

3. ஆக்கம்
பண்டுகாடு மன் → தற்போது நல்ல வயலாயிற்று என்பதை உணர்த்தியது

4. கழிவு
சிறிய ... எமக்கியும் மன்னே → இப்போது அவன் இறந்து பட்டதால் எமக்கு ஈதல் கழிந்தது எனப் பொருள் தந்தது

5. மிகுதி
எந்தை எமக்கு அருளும்மன் → மிகுதியும் அருளுவான் என்னும் பொருளைத் தந்தது

6. நிலைபேறு
மன்னா உலகத்து மன்னியது புரிமோ→ நிலைபெறாத உலகத்தில் நிலைபெற்றதைச் செய் என்னும் பொருளைத் தந்தது

**மற்று என்னும் இடைச்சொல் [3]**

433. *வினைமாற்று[1] அசைநிலை[2] பிறிது[3] எனும் மற்றே.*

[இ-ள்] மற்று என்னும் இடைச்சொல் 1. வினைமாற்று 2. அசைநிலை 3. பிறிது என்னும் மூன்று பொருள்களைத் தரும். [எ-டு]

1. வினைமாற்று
மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது → நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் வினையை மாற்றி இனிமேல் விரைவுபடாது அறிவாம் என்னும் வினையைத் தந்தது.

2. அசைநிலை
அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்று → வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது

3. பிறிது
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று → ஊழல்லது ஒன்று எனப் பொருள் தந்தது.

**மற்றை என்னும் இடைச்சொல் [1]**

434. *மற்றையது என்பது சுட்டியதற்கு இனம்.*

[இ-ள்] மற்றையது எனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றை என்னும் இடைச்சொல் முன் சுட்டின பொருளை விடுத்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும். [எ-டு]

இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக் கண்டு அதனை விரும்பாதவன் மற்றையது கொண்டு வா என்றால் அதற்கு இனமாகிய ஆடையைக் குறிக்கும். மற்று, மற்றை என்பன தனித்தனிச் சொற்கள். எனவே இதனை மற்று என்பதன் விகாரமாகக் கொள்ளக் கூடாது.



**கொல் என்னும் இடைச்சொல் [2]**

435. *கொல்லே ஐயம்[1] அசைநிலைக்[2] கூற்றே.*

[இ-ள்] கொல் என்னும் இடைச்சொல் 1. ஐயம் 2. அசைநிலை என்னும் இரண்டு பொருள்களில் வரும். [எ-டு]

1. ஐயம்
அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ → அணங்கோ மயிலோ எனத் துணிவின்மையைக் காட்டியது

2. அசைநிலை
கற்றதனால் ஆய பயனென் கொல் → வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது.

**ஒடு, தெய்ய என்னும் இடைச்சொல் [1]**

436. *ஒடுவும்[1] தெய்யவும்[2] இசைநிறை மொழியே.*

[இ-ள்] 1. ஒடு 2. தெய்ய என்னும் இரண்டும் இசைநிறைப் பொருளைத் தருவனவாம். [எ-டு]

1. ஒடு
விதைக்குறு வட்டி போதொடு பொதுள → வேறு பொருளின்றிச் செய்யுளில் இசையை நிறைத்து நின்றது

2. தெய்ய
சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே → இசை நிறையாக வந்தது.

**அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்கள் [2]**

437. *அந்தில்ஆங் கஅசைநிலை[1] இடப்பொருள்[2] அவ்வே.*

[இ-ள்] அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்கள் 1. அசைநிலைப் பொருள் 2. இடப்பொருள் என்னும் இரண்டு பொருள்களில் வரும். [எ-டு]

1. அசைநிலை
அந்தில் கழலினன் கச்சினன்
ஆங்கத் திறனல்ல யாம் கழற
} வேறுபொருள் இன்றி அசைநிலையாய் வந்தன

2. இடம்
வருமே சேயிழை அந்திற் கொழுநற்காணிய
ஆங்காங்கு ஆயினும் ஆக
} இவை அவ்விடத்து என்னும் இடப் பொருளைத் தந்தன.

Scanned with CamScanner

**அம்ம என்னும் இடைச்சொல் [2]**

438. அம்ம உரையசை[1] கேண்மின்[2] என்றுஆகும்.

[இ-ள்] அம்ம என்னும் இடைச்சொல் 1. உரையசைப் பொருளையும் 2. நான் சொல்வதைக் கேள் என்னும் ஏவற்பொருளையும் தரும். [எ-டு]

**1. உரையசை**

அது மற்றம்ம → வேறு பொருளின்றி உரையாடலில் உரையசையாய் நின்றது

**2. கேண்மின் என்னும் ஏவல்**

அம்ம வாழி தோழி → ஒன்றைச் சொல்வேன் கேள் என ஏவற் பொருளில் வந்தது

**மா என்னும் இடைச்சொல் [1]**

439. மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

[இ-ள்] மா என்னும் இடைச்சொல் வியங்கோளிடத்து வருகின்ற அசைச்சொல் ஆகும். [எ-டு]

புற்கை உண்கமா கொற்கையோனே → உண்க என்னும் வியங்கோளை அடுத்து அசையாய் வந்தது.

## அசைச்சொற்கள்

தமக்கென ஒரு பொருளுமின்றிப் பெயர் வினைகளோடு சார்த்திச் சொல்லப்படுவன அசைச்சொற்களாகும். இவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் வரும். அவற்றுள் முன்னிலைக்கு மட்டுமே வருவனவற்றை முன்னிலை அசைச்சொற்கள் எனப் பகுப்பர். பிற சொற்கள் மூவிட அசைச்சொல் என்றும் பொதுவசைச்சொல் என்றும் கூறப்பெறும்.

**முன்னிலை அசைச்சொற்கள் [10]**

440. மியா[1] இக[2] மோ[3] மதி[4] அத்தை[5] இத்தை[6]
வாழிய[7] மாள[8] ஈ[9] யாழ[10] முன் னிலைஅசை.

[இ-ள்] 1. மியா 2. இக 3. மோ 4. மதி 5. அத்தை 6. இத்தை 7. வாழிய 8. மாள 9. ஈ 10. யாழ என்பன முன்னிலை அசைச்சொற்கள் ஆகும். [எ-டு]

1. மியா → கேண்மியா
2. இக → காணிக
3. மோ → மொழிமோ
4. மதி → செல்மதி
5. அத்தை → செலியர் அத்தை
6. இத்தை → நீயொன்று பாடு இத்தை
7. வாழிய → காணிய வாழிய
8. மாள → தவிர்ந்தீக மாள
9. ஈ → சென்றீ பெரும
10. யாழ → நீயே ... செலவயர்ந்தி யாழ



**பொது அசைச்சொற்கள் [20]**

441. யா[1] கா[2] பிற[3] பிறக்கு[4] அரோ[5] போ[6] மாது[7] இகும்[8]
சின்[9] குரை[10] ஒரும்[11] போலும்[12] இருந்து[13] இட்டு[14]
அன்று[15] ஆம்[16] தாம்[17] தான்[18] கின்று[19] நின்று[20] அசைமொழி.

[இ-ள்] 1. யா 2. கா 3. பிற 4. பிறக்கு 5. அரோ 6. போ 7. மாது 8. இகும் 9. சின் 10. குரை 11. ஒரும் 12. போலும் 13. இருந்து 14. இட்டு 15. அன்று 16. ஆம் 17. தாம் 18. தான் 19. கின்று 20. நின்று ஆகிய இருபது இடைச்சொற்களும் (மூவிடங்களிலும் வருகின்ற) அசைச் சொற்கள் ஆகும். [எ-டு]

யா → யா பன்னிருவர் மாணாக்கர்
கா → இவளிவள் காண்டிகா
பிற → ஆயனை அல்ல பிற
பிறக்கு → பிறக்கதனுட் செல்லான்
அரோ → ஆலும் அரோ
போ → வாழாதென் போ
மாது → விளிந்தன்று மாதோ
இகும் → காண்டிகும் அல்லமோ
சின் → என்றிசின்
குரை → பல்குரைத் துன்பம்
ஒரும் → அஞ்சுவதோரும் அறனே
போலும் → மகிழ்ந்தனை போலும்
இருந்து → எழுந்திருந்தேன்
இட்டு → நெஞ்சம் பிளந்திட்டு
அன்று → சேவடி சேர்தும் அன்றே
ஆம் → பணியும் ஆம் என்றும் பெருமை
தாம் → அவையே தாம்
தான் → அதுவே தானும்
கின்று → வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்
நின்று → தோன்றாத் துணையாய் நின்றான்.

Scanned with CamScanner

# 3. பொதுவியல்

பொதுவியல் என்பது முன்னர்க் கூறிய பெயர், வினைச் சொற்களுக்கும் பின்னர்க் கூறப் போகின்ற இடை, உரிச்சொற்களுக்கும் உரிய பொதுவான இலக்கணத்தைக் கூறும் இயல். ஆதலின் பொதுவியல் எனப் பெயர் பெற்றது. இது ஐந்து இயல்களின் நடுவாக அமைந்தது. முன் இரு இயல்களையும் பின் இரு இயல்களையும் அரிமா நோக்காகத் தழுவி நிற்கிறது. இவ்இயல் 68 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகிறது.

**ஒன்றொழி பொதுச்சொல்**

352. இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே.

[இ-ள்] உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணையிலும் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் குறிப்பினால் ஒரு பாலை ஒழித்து மற்றொரு பாலை உணர்த்தும். (இதுவே ஒன்றொழி பொதுச்சொல் ஆகும்). [எ-டு]

12M

1. ஆயிரம் மக்கள் போர் புரிந்தனர்
இத்தொடரில் மக்கள் என்பது உயர்திணைப் பொதுப்பெயர். புரிந்தனர் என்பது இருதிணைப் பொதுவினை போர் என்னும் குறிப்பினால் மக்கள் என்னும் பெயர் பெண்பாலை ஒழித்து ஆண்பாலை உணர்த்தியது.
2. பெருந்தேவி பொறை உயிர்த்த (கரு உயிர்த்த) கட்டிலின் கீழ் நால்வர் மக்கள் உளர்.
இத்தொடரில் மக்கள் - பொதுப்பெயர்; உளர் - பொதுவினை.
பொறை உயிர்த்தல் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கியது.
3. இப்பெற்றங்கள் (மாடுகள்) உழவு ஒழிந்தன.
இத்தொடரில் பெற்றங்கள் - அஃறிணைப் பொதுப்பெயர்; ஒழிந்தன - பொதுவினை. உழவு என்னும் குறிப்பால் ஆண்பாலை (எருது) உணர்த்திப் பெண்பாலை நீக்கியது.
4. இப் பெற்றங்கள் பால் சொரிந்தன.
இத்தொடரில் அமைந்த பால் என்னும் குறிப்பு ஆண்பாலை நீக்கிப் பெண்பாலைக் (பசு) காட்டியது.

**செய்யுளில் பெயர், வினையின் ஈற்றயல் திரிதல்**

353. பெயர்வினை இடத்து னளரய ஈற்றுஅயல்
ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே.

[இ-ள்] செய்யுளில் பெயரிடத்தும் வினையிடத்தும் ஈற்றில் அமைந்த ன, ள, ர, ய என்னும் எழுத்துக்களுக்கு முன் உள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரியும். [எ-டு]

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| ன் - வில்லான் | -வில்லோன் | பெயர்ச் சொற்களின் ஈற்றயல் ஆ, ஓ ஆகியது |
| ள் - தொடியாள் | -தொடியோள் | |
| ர் - நல்லார் | -நல்லோர் | |
| ய் - கொடுத்தாய் | -கொடுத்தோய் | |

| | | |
|---|---|---|
| ன் - படைத்தான் | -படைத்தோன் | வினைச் சொற்களின் ஈற்றயல் ஆ,ஓ ஆகியது. |
| ள் - பெயர்த்தாள் | -பெயர்த்தோள் | |
| ர் - வந்தார் | -வந்தோர் | |
| ய் - வந்தாய் | -வந்தோய் | |

**உருபும் விகுதிகளும் எதிர்மறையில் திரியாமை**

354. உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்
திரியாது தத்தம்ஈற்று[1] உருபின்[2] என்ப.

[இ-ள்] எட்டு வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச்சொற்களும் (முற்று, பெயரெச்சம், வினையெச்சம்) எதிர்மறுத்துக் கூறும் போதும் 1. தத்தம் ஈற்றினின்றும் வேறுபடா 2. அவ்வவ் உருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

| உடன்பாடு | எதிர்மறை | |
|---|---|---|
| சாத்தான் வருவான் | → சாத்தான் வாரான் | வேற்றுமை உருபுகள் எதிர்மறையில் மாறவில்லை |
| குடத்தை வனைந்தான் | → குடத்தை வனையான் | |
| வாளால் வெட்டினான் | → வாளால் வெட்டான் | |
| புலவர்க்குக் கொடுப்பான் | →புல்லர்க்குக் கொடான் | |
| ஊரின் நீங்கினான் | → குணத்தின் நீங்கான் | |
| பொருளினது உண்மை | → செயலினது இன்மை | |
| நல்லவர்கண் சேர்வான் | → தீயார்கண் சேரான் | |
| நண்பா! போ | → தம்பீ! போகேல் | |

| | |
|---|---|
| நடப்பான்-ஆன்-நடவான் | விகுதிகள் வினைச்சொற்களில் மாறுபடாமல் நின்றன |
| நடந்து-து-நடவாது | |
| நடக்குங்கால்-கால்-நடவாக்கால் | |

| | | |
|---|---|---|
| செய்ய→ செய்யாமல், செய்யாது, செய்யாமை | வினையெச்சம் | எதிர்மறையில் ஈறு திரிந்து நின்றன |
| நடத்தல்-நடவாமை → | தொழிற்பெயர் | |
| உண்ணாய், உண்ணேல், உண்ணாதே | ஒருமை ஏவல் | |

**உருபும் வினையும் அடுக்கி முடிதல்**

355. உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுஉற முடியும்.



[இ-ள்] எட்டு வேற்றுமை உருபுகளும் 1. வெளிப்பட்டும் 2. மறைந்தும் பல அடுக்கியும் வரும் 3. மூவகை வினைச்சொற்களும் வெவ்வேறு பல அடுக்கியும் வரும். ஆயினும் தாம் தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று இறுதியில் வர முடியும். [எ-டு]

1. (அ) கோட்டை நுனிக்கண் பொருட்கு வாளால் குறைத்தான்.
இதில் 2, 7, 4, 3 ஆகிய நான்கு உருபுகள் கலந்து அடுக்கிக் குறைத்தான் என்னும் வினையைக் கொண்டு முடிந்தன.

ஆ) சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான் — ஐ உருபு பல அடுக்கி ஒரு வினை கொண்டது.

இ) சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை — கு உருபு பல அடுக்கி ஒரு பெயர் கொண்டது.

2. அ) கோல் கைக் கொண்டான் → உருபு தொக்கு வினை கொண்டது
ஆ) அருள் அறம் உடையவன் → உருபு தொக்குப் பெயர் கொண்டது.

3. அ) ஆடினான் பாடினான் சாத்தன் → வினைமுற்றுக்கள் அடுக்கிப் பெயர் கொண்டன.
ஆ) இளையள் மெல்லியள் மடந்தை → குறிப்பு வினை அடுக்கிப் பெயர் கொண்டது.
இ) கற்ற கேட்ட பெரியோர் → தெரிநிலைப் பெயரெச்சம் பல அடுக்கிப் பெயர் கொண்டது.
ஈ) நெடிய பெரிய காது → குறிப்புப் பெயரெச்சம் பல அடுக்கிப் பெயர் கொண்டது.
உ) கற்றுக் கேட்டு அறிந்தார் → தெரிநிலை வினையெச்சம் வேறு பல அடுக்கி வினை கொண்டது.
ஊ) விருப்பின்றி வெறுப்பின்றி வாழ்ந்தார் → குறிப்புப் பெயரெச்சம் வேறு பல அடுக்கி வினை கொண்டது.

## இடைப்பிறவரல்

தொடர்களில் வேற்றுமை உருபேற்ற பெயர் முதலானவை நிலைமொழியாய் நிற்கும். அவற்றுக்கும் அவை கொண்டு முடிகின்ற சொற்களுக்கும் இடையில் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வரும். அவை இடைப்பிறவ்ரல் எனப்படும். இடையில் பிற வருதலால் இடைப்பிறவரல் என்பது காரணப் பெயர் ஆகும்.

**இடைப்பிறவரலின் இலக்கணம்**

356. உருபு[1] முற்று[2]ஈர் எ ச்சம்[4] கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன.

[இ-ள்] 1. எட்டு வேற்றுமை உருபுகளும் 2. வினைமுற்றுக்களும் 3. பெயரெச்சம் 4. வினையெச்சங்களும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் கொண்டு முடியும். நடுவில் அவ்வவ் இடத்திற்குப் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வருதலும் உண்டு. [எ-டு]

Scanned with CamScanner

| நிலைமொழி | இடைப்பிறவரல் | முடியும்சொல் | தொடர் |
|---|---|---|---|
| 1.சாத்தன் | (வயிறார) | உண்டான் | எழுவாய் |
| 2.அறத்தைச் | (அழகுபெறச்) | செய்தான் | 2-ஆம் வேற்றுமை |
| 3.வாளால் | (மாய) | வெட்டினான் | 3-ஆம் வேற்றுமை |
| 4.வந்தான் | (ஊர்க்குப்போன) | சாத்தன் | வினைமுற்று |
| 5.வந்த | (அவ்வூர்ச்) | சாத்தன் | பெயரெச்சம் |
| 6.வந்து | (ஊர்க்குப்) | போயினான் | வினையெச்சம் |

வருமொழியுடன் ஏலாத (பொருந்தாத) சொற்கள் இடைப்பிறவரலாக வாரா. 'கருதலர்ச் சீறிய கடுங்கொல் யானை' என்பதில் கடும் என்பது மட்டுமே இடைப்பிறவரல் 'வல்லம் எறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி' என்பதில் வல்லம் எறிதல் பெருவழுதிக்கும் கோசர்க்கும் உரியதாகி இரண்டு பக்கமும் பொருந்தித் துணிவு தோன்றாது நிற்கிறது. எனவே இது போன்று பொருந்தாச் சொற்களும் இடையில் வாரா.

### முடிக்கும் சொற்கள் நிற்கும் இடம்

357. *எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.*

[இ-ள்] வேற்றுமை உருபுகளும் வினைமுற்றுக்களும் எச்சங்களும் பெயர், வினைகளைக் கொண்டு முடியும். அப்பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் அவ்வேற்றுமை உருபு முதலானவற்றிற்கு இறுதியிலும் வரும்.

இறுதியிலும் வரும் என்றதால் முதலில் வருதலையும் கொள்ள வேண்டும். [எ-டு]

| ஈற்றில் வருதல் | முதலில் வருதல் |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| எனக்குத் தந்தான் | தந்தான் எனக்கு |
| ஊரின் நீங்கினான் | நீங்கினான் ஊரின் |
| சாத்தனது ஆடை | ------------- |
| மணியில் ஒளி | ------------- |
| சாத்தா வா | வா சாத்தா |

வந்தான் சாத்தன் சாத்தன் வந்தான் → முற்று
வந்து போயினான் போயினான்வந்து → வினையெச்சம்
ஆடை சாத்தனது → (ஆறாம் வேற்றுமை உருபு) } என முதலில்
ஒளி மணியில் → (ஏழாம் வேற்றுமை உருபு) } வாரா
சாத்தன் வந்த → (பெயரெச்சம்) என மாறி வராது.



## இனங்குறித்தல்

நால்வகைச் சொற்களாகிய பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றுள் ஒருசொல் நின்று தன்னை உணர்த்துவதோடு தன் இனத்தையும் தழுவிப் பொருள் தரும். இதனை இனங்குறித்தல் என்பர். இது வடமொழியில் உபலட்சணம் எனப்படும்.

### தன் இனத்தை உணர்த்தும் ஒருமொழிகள்

358. *ஒருமொழி ஒழிதன் இனம்கொளற்கு உரித்தே.*

[இ-ள்] ஒருசொல் தன்னை உணர்த்துவதோடு ஒழிந்து நின்ற தன் இனங்களையும் தழுவிக் கொள்வதற்கு உரியதாகும். [எ-டு]

1. **சோற்றை நனி உண்டான்** என்று கூறும்போது அதற்கினமாகிய காய்கறி போன்றவற்றை நனிதின்றான் எனக்கூறாமலேயே விளங்குகிறது. இதில் சோறு என்னும் பெயர்ச்சொல்லும் ஐ என்ற உருபிடைச் சொல்லும் கறி என்னும் பெயர்ச் சொல்லையும் ஐ என்ற உருபிடைச் சொல்லையும் தழுவுதற்கு உரியனவாய் நின்றன.
2. **வெற்றிலை தின்றான்;** இது பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றையும் தின்றான் என இனம் தழுவியது.
3. **நஞ்சுண்டவன் சாவான்** என நின்ற ஆண்பால் பிற பால்களையும் (நஞ்சுண்டவள் சாவாள் . . . . நஞ்சுண்டவை சாம்) தழுவி நின்றது.

### பொதுப்பெயர், பொதுவினைகள் பொதுமை நீக்கும் தன்மை

359. *பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்*
*மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.*

[இ-ள்] திணை, பால், இடம், காலம் ஆகியவற்றுக்குப் பொதுவான பெயர்களும் வினைகளும் உள. அவற்றை அடுத்து வரும் சிறப்பாகிய பெயர்வினைகள் பொதுத்தன்மையை நீக்கி ஒன்றுக்கு உரிமைப்படுத்தும். [எ-டு]

**பொதுப்பெயர்**

சாத்தன் இவன்
சாத்தன் இது } பெயர், திணைப்பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயர் நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது.

சாத்தன் வந்தான்
சாத்தன் வந்தது } பெயர்,திணைப் பொதுமையைப் பின் வந்த சிறப்பு வினை நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது

ஒருவர் என் தாயர்
ஒருவர் என் தந்தையார் } பெயர், பால் பொதுமையைப் பின்வந்த சிறப்புப் பெயர் நீக்கி ஒரு பாலுக்கு உரிமை செய்தது

மரம் வளர்ந்தது
மரம் வளர்ந்தன } பெயர், பால் பொதுமையைப் பின் வந்த சிறப்புவினை நீக்கி ஒரு பாலுக்கு உரிமை செய்தது

யாமெல்லாம் வருவோம்
நீரெல்லாம் வருவீர்
அவரெல்லாம் வருவார் } பெயர், இடப்பொதுமையை முன் வந்த சிறப்புப்பெயரும் பின்வந்த சிறப்பு வினையும் நீக்கி ஒரிடத்துக்கு உரிமை செய்தன.

### எச்சங்கள்

குறைந்து நிற்கும் வினைச்சொல் எச்சமாகும். இது பத்து வகைப்படும். இவற்றைச் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்னும் இரண்டனுள் அடக்கலாம்.

### எச்சங்களும் [10] அவற்றின் முடிபுகளும்

360. பெயர்[1] வினை[2] உம்மை[3] சொல்[4] பிரிப்பு[5] என[6] ஒழியிசை[7]
எதிர்மறை[8] இசை[9] எனும் சொல்ஒழிபு ஒன்பதும்
குறிப்பும்[10] தத்தம் எச்சம் கொள்ளும்.

[இ-ள்] 1. பெயர் 2. வினை 3. உம்மை 4. சொல் 5. பிரிநிலை 6. என 7. ஒழியிசை 8. எதிர்மறை 9. இசை என்னும் சொல்லெச்சங்கள் ஒன்பதாகும். 10. குறிப்பெச்சம் ஒன்றாகும். இவை பத்தும் தத்தமக்குரிய எச்சச் சொற்களைக் கொண்டு முடியும்.

இப்பத்துள் பெயரெச்சம், வினையெச்சம், எனவென் எச்சம் என்னும் மூன்றில் மட்டுமே எச்சச் சொற்கள் தொடர்களில் வெளிப்பட்டு நிற்கும். பிறவற்றில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

1. **பெயரெச்சம் :** பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் ஆகும். [எ-டு]
செய்த சாத்தன் → தெரிநிலை; நல்ல சாத்தன் → குறிப்பு
2. **வினையெச்சம் :** வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும்.
(எ-டு) சென்று வீழ்ந்தான் → தெரிநிலை; மெல்ல வந்தான் → குறிப்பு
3. **உம்மையெச்சம் :** உம் என்பது நடந்ததையோ நடக்கப் போவதையோ வெளிப்படுத்துவது உம்மையெச்சமாகும். [எ-டு]
சாத்தனும் வந்தான். முன்னே கொற்றனும் வந்தான். (அ) பின்னர்க் கொற்றனும் வருவான் எனத் தன்னெச்சத்தைக் கொண்டது.
4. **சொல்லெச்சம் :** சொல் என்னும் இடைச்சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் ஆகும். [எ-டு]
கடியென்றார் (நீக்கென்றார்) கடி என்று சொன்னார் என ஒரு சொல் எஞ்சியது.
5. **பிரிநிலை எச்சம் :** பிரிக்கப் பட்ட பொருளைத் தருவது பிரிநிலை எச்சமாகும். [எ-டு]
அவனே கொண்டான் - பிறர் கொண்டிலர் எனத் தன்னெச்சம் கொண்டது.



6. **எனவென் எச்சம் :** தனக்குரிய வினையைக் கொண்டு முடிவதே எனவென் எச்சமாகும். [எ-டு]
கடல் ஒல்லென ஒலித்தது - என என்னும் எச்சம் தன்வினையான ஒலித்தது என்பதைக் கொண்டு முடிந்தது.
7. **ஒழியிசை எச்சம்:** ஒழிந்த பொருளைத் தருவது ஒழியிசை எச்சமாகும். [எ-டு]
படிப்பதற்கோ வந்தான். இது விளையாட வந்தான் என ஒழிந்த பொருளைக் கொண்டு முடிந்தது.
8. **எதிர்மறை எச்சம் :** எதிர்மறைப் பொருளைத் தருவது எதிர்மறை எச்சமாகும். [எ-டு]
யானோ செய்தேன் - செய்யவில்லை என எதிர்மறைப் பொருளைக் கொண்டு முடிந்தது.
9. **இசை எச்சம் :** தொடரில் அமைந்த சொற்களை இடத்திற்கு ஏற்ப வேண்டியனதந்து அகல உரைகூற வேண்டி நிற்பது இசை எச்சமாகும். [எ-டு]
1. கற்றதனால் ஆய பயனென் கொல் என்றவிடத்து நூலைக்கற்றதனால் என ஒரு சொல்லை வருவித்து உரைக்க வேண்டும்.
2. அம்தாமரை அன்னமே நின்னையான் அகன்று ஆற்றுவேனோ? என்றவிடத்து என் உயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்கள் வருவித்து உரைக்க வேண்டும்.
10. **குறிப்பு எச்சம் :** பொருளைக் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு எச்சமாகும். அது ஒன்றொழி பொதுச்சொல் முதலாகக் கூறப்பட்ட ஒன்பதுமாம். [எ-டு]
ஆயிரம் மக்கள் பொருதார் → மக்கள் என்னும் பொதுப்பெயர் பொருதார் என்னும் வினையால் ஆண்பாலைக் குறித்தது.

## தொகைநிலைத் தொடர்மொழி (ELLIPTICAL COMPOUNDS)

சொற்கள் ஒன்றோடு ஒன்று பொருள் பொருத்தமுறத் தொடர்வது தொடராகும். அது 1. தொகை நிலைத் தொடர் 2. தொகா நிலைத் தொடர் என இருவகைப்படும். இவற்றுள் தொகைநிலைத் தொடர் என்பது இருசொற்களுக்கு இடையில் வேற்றுமை முதலியவற்றின் உருபுகள் மறைந்து வருதலைக் குறிக்கும்.

### தொகைநிலைத் தொடர்மொழிகளின் இலக்கணம்

361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்துஒரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.

Scanned with CamScanner

[இ-ள்] பெயர்ச்சொல்லோடு பெயர்ச் சொல்லும் பெய
சொல்லோடு வினைச்சொல்லும் கூடி வேற்றுமை, வினை, பண்
உவமை, உம்மை, அன்மொழி என்னும் அறுவகைப் பொரு
புணர்ச்சியை அடையும். அவ்விடத்து வேற்றுமை முதலியவற்றி
உருபுகள் இடையே மறைந்து நிற்க இரண்டு முதலிய பல சொற்
தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பன தொகைநிலைத்தொடர் ஆகும்.

**தொகைகளின் வகைகள் [ 6 ]**

362. வேற்றுமை[1] வினை[2] பண்பு[3] உவமை[4] உம்மை[5]
அன்மொழி[6] எனஅத் தொகைஆறு ஆகும்.

[இ-ள்] தொகைநிலைத் தொடர்மொழிகள் 1. வேற்றுமைத் தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உவமைத் தொகை 5. உம்மைத்தொகை 6. அன்மொழித் தொகை என அறுவகைப்படும்.

**வேற்றுமைத் தொகையின் இலக்கணம்**

363. இரண்டு முதலாம் இடைஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.

[இ-ள்] எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இடையில் நிற்கும் ஐ முதலான ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகையாம். [எ-டு]

1. நிலம் கடந்தான் (நிலத்தைக் கடந்தான்) — 2 ஆம் வே. தொகை
2. தலை வணங்கினான் (தலையால் வணங்கினான்) — 3 ஆம் வே. தொகை
3. கொற்றன் மகன் (கொற்றற்கு மகன்) — 4 ஆம் வே. தொகை
4. ஊர் நீங்கினான் (ஊரின் நீங்கினான்) — 5 ஆம் வே. தொகை
5. சாத்தன் கை (சாத்தனது கை) — 6 ஆம் வே. தொகை
6. குன்றக் கூகை (குன்றத்தின் கண் கூகை) — 7 ஆம் வே. தொகை

யானைக் கோட்டு நுனி குறைத்தான் → பன்மொழித்தொடர்.

1. இத்தொகை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகவும் வரும்.
[எ-டு] அரிசிக்கடை (அரிசியை விற்கும் கடை)
இத்தொடரில் ஐ என்பது உருபு; விற்கும் என்பது பயன் (இணைப்புச்சொல்)

2. இடையில் அன்றி ஈற்றில் உருபு மறைந்து வருவதும் வேற்றுமைத் தொகையாகும். [எ-டு]
கடந்தான் நிலம் (நிலத்தை) → வேற்றுமை உருபு ஈற்றில் மறைந்து நின்றது.

உருபுகள் மறைந்து நிற்பதற்குரிய இடத்தில் மட்டுமே தொகையாக வரும். பொருள் தராத இடங்களில் தொக்கு (மறைந்து) நில்லா. [எ-டு] சாத்தனை அடித்தான். இதில் 'ஐ' உருபு மறைந்து சாத்தன் அடித்தான் என செயப்படுபொருளைத் தரவில்லை. இது போன்ற இடங்களில் தொகை அமையாது. எனவே பொருள்படும் இடத்து மட்டுமே வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்கும்.



**வினைத்தொகையின் இலக்கணம்**

364. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

[இ-ள்] காலத்தைக் காட்டுகின்ற இடைநிலையும் விகுதியும் மறைந்து நிற்க வினைப்பகுதி மட்டும் பெயரைத் தொடர்ந்து வரின் (பெயரெச்சம்) அது வினைத்தொகை ஆகும். [எ-டு]

நேற்று அடு களிறு - இத்தொடர் இறந்தகால வினைத்தொகை ஆகும். இதனை விரிக்குமிடத்து நேற்று அட்ட களிறு என விரியும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பொருந்தாமல் பொதுவாக நிற்பது முக்கால வினைத்தொகை ஆகும். [எ-டு]

கூப்பு கரம்; ஈட்டுபுகழ்; காய்கதிர்; சுடுதீ.

**பண்புதொகையின் இலக்கணம் [ 2 ]**

365. பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்[1]
ஒருபொருட்கு இருபெயர் வந்தவும்[2] குணத்தொகை.

[இ-ள்] 1. பண்புப் பெயர்க்கும் பண்பை உடைய பொருட் பெயர்க்கும் (பண்போடு, பண்பிக்கு) உள்ள ஒற்றுமையை விளக்குகின்ற ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து நிற்பவை 2. ஒரு பொருளுக்குச் சிறப்புப் பெயர், பொதுப்பெயர் என்னும் இரு பெயர்கள் வருதல் ஆகியவை பண்புத்தொகைகளாம். [எ-டு]

1. பண்புத்தொகை வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் பண்புகளைப் பெற்று வரும்.

செந்தாமரை (செம்மையாகிய தாமரை); கருங்குதிரை → வண்ணம்
வட்டக்கல் (வட்டமாகிய கல்); சதுரப்பலகை → வடிவு
ஒருபொருள் (ஒன்றாகிய பொருள்); இருபொருள் → அளவு
இன்சொல் (இனிதாகிய சொல்); துவர்க்காய் → சுவை.

2. ஒரு பொருளுக்கு இருபெயர் (இருபெயரொட்டு) அமைதல்.
ஆனித்திங்கள் (ஆனியாகிய திங்கள்); முல்லைப்பூ (முல்லையாகிய பூ); சாரைப்பாம்பு (சாரையாகிய பாம்பு).

**உவமைத்தொகையின் இலக்கணம்**

366. உவம உருபுஇலது உவமத் தொகையே.

[இ-ள்] வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வருகின்ற உவம உருபுகள் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் உவமைத் தொகையாகும். [எ-டு]

1. புலிக்கொற்றன் (புலி போலும் கொற்றன்)
குருவி கூப்பிட்டான் (குருவியைப் போலும் கூப்பிட்டான்) } வினை (தொழில்)

2. மழைக்கை (மழை போலும் கை)
கற்பக வள்ளல் (கற்பகம் போலும் வள்ளல்) } பயன்

Scanned with CamScanner

| | |
|---|---|
| துடியிடை (துடி போலும் இடை) | மெய் (வடிவம்) |
| வேய்த்தோள் (வேய் போலும் தோள்)<br>4. கார்கூந்தல் (கார் போலும் கூந்தல்)<br>பவளவாய் (பவளம் போலும் வாய்) | உரு (நிறம்) |
| மரகதக் கிளிமொழி - மரகதம் போலும் கிளி போலும் மொழி<br>இருள் மழைக்கை - இருள் போலும் மழைபோலும் கை | பன்மொழித் தொடர் |

**உவம உருபுகள் [ 12 ]**

367. போலப்[1] புரைய[2] ஒப்ப[3] உறழ[4]
மானக்[5] கடுப்ப[6] இயைய[7] ஏய்ப்ப[8]
நேர[9] நிகர[10] அன்ன[11] இன்ன[12]
என்பவும் பிறவும் உவமத்து உருபே.

[இ-ள்] 1. போல 2. புரைய 3. ஒப்ப 4. உறழ 5. மான 6. கடுப்ப 7. இயைய 8. ஏய்ப்ப 9. நேர 10. நிகர 11. அன்ன 12. இன்ன என்பனவும் இவை போன்ற பிறவும் உவம உருபுகளாகும். இவற்றுள் போல முதல் நிகர ஈறாகிய பத்தும் செயவென்னும் வாய்பாட்டு எச்சமாகும். அன்ன, இன்ன என்னும் இரண்டும் பெயரெச்சக் குறிப்புக்கள் ஆகும்.

பிற எனக் கூறியமையால் 1. போல், புரை என ஈறு திரிந்து வருவனவற்றையும் 2. பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய போன்றவற்றையும் கொள்ளல் வேண்டும்.

**உம்மைத் தொகையின் இலக்கணம் [ 4 ]**

368. எண்ணல்[1] எடுத்தல்[2] முகத்தல்[3] நீட்டல்[4]
எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை.

[இ-ள்] 1. எண்ணல் அளவை 2. எடுத்தல் அளவை 3. முகத்தல் அளவை 4. நீட்டல் அளவை என்னும் நான்கு அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்துத் தொடர்கின்ற அளவைப் பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்பவை உம்மைத் தொகைகளாகும். [எ-டு]

| | |
|---|---|
| ஒன்றே கால் (ஒன்றும் காலும்)<br>கபில பரணர் (கபிலரும் பரணரும்) | எண்ணல் அளவை |
| கழஞ்சே கால் (கழஞ்சும் காலும்)<br>தொடி யே கஃசு (தொடியும் கஃசும்) | எடுத்தல் அளவை |
| கலனே குறுணி (கலனும் குறுணியும்)<br>நாழி ஆழாக்கு (நாழியும் ஆழாக்கும்) | முகத்தல் அளவை |
| சாண் அங்குலம் (சாணும் அங்குலமும்)<br>முழம் சாண் (முழமும் சாணும்). | நீட்டல் அளவை |
| புலிவில்கெண்டை (புலியும் வில்லும் கெண்டையும்)<br>சேரசோழபாண்டியர் (சேரனும் சோழனும் பாண்டியனும்) | பன்மொழித் தொடர் |



**அன்மொழித் தொகையின் இலக்கணம்**

369. ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.

[இ-ள்] வேற்றுமைத் தொகை முதலிய தொகைகளுக்குப் புறத்தே அவை அல்லாத பிற (மொழிகளாகிய உருபுகள்) மறைந்து வருவன அன்மொழித் தொகையாம்.

(ஐந்து தொகைகளுக்கு உரியவை அல்லாத மொழிகள் மறைந்து நிற்பதால் அன்மொழி என்பது காரணப் பெயராகும்). [எ-டு]

**1. வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) பூங்குழல் - பூவை அணிந்த குழலினை உடையாள் (2ஆம் வேற்றுமை)
ஆ) பொற்றொடி- பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் (3ஆம் வேற்றுமை)
இ) அணி இலக்கணம்-அணிக்கு இலக்கணம் சொன்ன நூல் (4ஆம் வேற்றுமை)
ஈ) பொற்றாலி-பொன்னின் ஆகிய தாலி உடையாள் (5ஆம் வேற்றுமை)
உ) கிள்ளிகுடி-கிள்ளியது குடியிருக்கும் ஊர் (6ஆம் வேற்றுமை)
ஊ) கீழ் வயிற்றுக் கழலை-கீழ் வயிற்றுக்கண் எழுந்த கழலை போல்வான் (7ஆம் வேற்றுமை)

**2. வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) தாழ்குழல் (தாழ்ந்த குழலினை உடையாள்) வந்தாள்
ஆ) செறிதொடி (செறிந்த தொடியினை உடையாள்) பார்த்தாள்.

**3. பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) ஆண்டகை (ஆண்மையாகிய பண்பை உடையான்) வந்தான்
ஆ) கருங்குழல் (கரிய குழலினை உடையாள்) வந்தாள்.

**4. உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) துடியிடை (துடிபோலும் இடையை உடையாள்) சென்றாள்
ஆ) கிளிமொழி (கிளி போலும் மொழியை உடையாள்) பேசினாள்.

**5. உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) உயிர்மெய் (உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து) அறிவான்
ஆ) தகரஞாழல் (தகரமும் ஞாழலும் கலந்த சாந்தணிந்தாள்) சென்றாள்.

| | |
|---|---|
| இ) மதித்திருமுகப் பூங்குழல் (மதிபோலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையும் உடையாள்) கண்டாள் | பன்மொழித் தொடர் |

## தொகைகளில் பொருள் சிறந்து நிற்கும் இடம் [ 4 ]

370. முன்மொழி[1] பின்மொழி[2] பன்மொழி[3] புறமொழி[4]
எனும்நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.

[இ-ள்] தொகைநிலைத் தொடர் மொழிகளில் 1. முன் நிற்கும் மொழி 2. பின் நிற்கும் மொழி 3. அனைத்து மொழிகள் இவற்றையே அல்லாமல் 4. புறத்தில் வருகின்ற மொழி என்கின்ற நான்கனுள் ஒன்றில் பொருள் சிறந்து நிற்கும்.

நான்கிடத்தும் எனப் பொதுப்படக் கூறப்பட்டது. ஆயினும் உம்மைத் தொகையில் பல மொழியில் பொருள் சிறக்கும். அன்மொழித் தொகையின் புறமொழியில் பொருள் சிறக்கும். மற்றைய நான்கு தொகையும் இடங்களுக்கு ஏற்ப முன்மொழியிலும் பின்மொழியிலும் பொருள் சிறந்து நிற்கும். [எ-டு]

**முன்மொழி**

| | | |
|---|---|---|
| 1.குடம்வனைந்தான் | - வேற்றுமைத் தொகை | முன்மொழிகள் இனம் விலக்கி (நீக்கி) நின்றதால் முன்மொழிகளில் பொருள்சிறந்தன |
| 2.விரிபூ | - வினைத்தொகை | |
| 3.செந்தாமரை | - பண்புத்தொகை | |
| 4.வேங்கைப்பூ | - இருபெயரொட்டு | |
| 5.வேற்கண் | - உவமைத்தொகை | |

**பின்மொழி**

| | | |
|---|---|---|
| 1. நிலம் உழுதான் | - வேற்றுமைத்தொகை | பின் மொழிகளில் பொருள் சிறந்தன |
| 2. சுடுதீ | - வினைத்தொகை | |
| 3. செஞ்ஞாயிறு | - பண்புத்தொகை | |
| 4. புலிப் பாய்ச்சல் | - உவமைத்தொகை | |

**பன்மொழி – உம்மைத்தொகை**

1. இராப்பகல், கபிலபரணர்
2. சேரசோழபாண்டியர், புலிவில்கெண்டை

} அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்தன

**புறமொழி**

தாழ்குழல், பொற்றொடி, பூங்குழல் → அன்மொழித் தொகையின் புறமொழியில் மட்டும் பொருள் சிறந்தன.

## இடத்தொகை, பெயர்த் தொகைகளுக்கு உரிய வேறுபாடு

371. வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்[1]
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.[2]

[இ-ள்] 1. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் வல்லின மெய் மிகுந்து வரின் (இடப்பொருளில் வரும் ஏழாம்) வேற்றுமைத் தொகையாகும் 2. மெல்லின மெய் இடையில் மிகுந்து வந்தால் பெயர்கள் தொக்க இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகும். [எ-டு]



1. வடுகக் கண்ணன் வடுக நாட்டின்கண் பிறந்த கண்ணன்
துளுவச் சாத்தன் · துளுவ நாட்டின்கண் பிறந்த சாத்தன்
} வல்லெழுத்து இடத்தொகை

2. வடுகங் கண்ணன் → வடுகனாகிய கண்ணன்
வடுகனுக்கு மகனாகிய கண்ணன்
துளுவஞ் சாத்தன் → துளுவனாகிய சாத்தன்
துளுவனுக்கு மகனாகிய சாத்தன்
} மெல்லெழுத்துப் பெயர்த்தொகை

இவ்வாறு வல்லெழுத்தோ மெல்லெழுத்தோ வரின் அவ்வெழுத்தைக் கொண்டு தொகைகளின் வேறுபாட்டை அறிய முடியும்.

வடுக நாகன்
வடுக வணிகன்
வடுக அரசன்
} என மெய்யெழுத்து மிகா மொழிகளில் சொல்லுவான் குறிப்பால் மட்டுமே பொருள் துணிய முடியும்.

## உம்மைத் தொகைக்குச் சிறப்பு விதி

372. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

[இ-ள்] உயர்திணை ஒருமையில் வருகின்ற உம்மைத் தொகைகள் பலர்பால் விகுதிகளைப் பெற்று முடியும். அவை ரகர ஒற்றும் கள் என்னும் ஈறும் ஆகும். [எ-டு]

| | | | |
|---|---|---|---|
| கபிலன் பரணன் | → | கபிலபரணர் | பலர்பாலில் ரகர ஈற்றைப் பெற்றன |
| கல்லாடன் மாமூலன் | → | கல்லாடமாமூலர் | |
| சேரன்சோழன் பாண்டியன் | | சேரசோழபாண்டியர் | |

தேவன் தேவி→ தேவன் தேவிகள் → கள் ஈறு பெற்றது.

அஃறிணையிலும் பொதுத்திணையிலும் உம்மைத்தொகைகள் பன்மை விகுதி பெற்றும் பெறாமலும் வரும். [எ-டு]

| | |
|---|---|
| நன்மை, தீமை | → பன்மை விகுதி இன்றி வந்தது |
| நன்மை தீமைகள் | → பன்மை விகுதி பெற்று வந்தது |
| தந்தை தாய் | → பன்மை விகுதி இன்றி வந்தது |
| தந்தை தாய்கள் | → பன்மை விகுதி பெற்று வந்தது. |

## தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்

373. தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.

[இ-ள்] வேற்றுமை உருபு முதலியவை மறைந்து நிற்கும் தொகை நிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுகின்ற இடத்து அவை ஒரு பொருளே அன்றி இரண்டு முதல் ஏழ் ஈறாகிய பல பொருள்களால் மயங்கும். (இவ்வாறு அமைவது பொருள் மயக்கம் ஆகும்).[எ-டு]

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| தெய்வ வணக்கம் → | 1. தெய்வத்தை வணங்கும் வணக்கம் | (2ஆம் வே.உ.ப.) |
| | 2. தெய்வத்துக்கு வணங்கும் வணக்கம் | (4ஆம் வே.உ.ப.) |
| | | (2ஆம் வேற்றுமை) |
| தற்சேர்ந்தார் | → 1. தன்னைச் சேர்ந்தார் | (3ஆம் வேற்றுமை) |
| | 2. தன்னொடு சேர்ந்தார் | (7ஆம் வேற்றுமை) |
| | 3. தன்கண் சேர்ந்தார் | (6ஆம் வேற்றுமை) |
| சொல்லிலக்கணம் → | 1. சொல்லினது இலக்கணம் | (4ஆம் வேற்றுமை) |
| | 2. சொல்லுக்கு இலக்கணம் | (7ஆம் வேற்றுமை) |
| | 3. சொல்லின்கண் இலக்கணம் | (அன்மொழி) |
| | 4. சொல்லினது இலக்கணம்கூறிய நூல் | (3ஆம் வே.உ.ப.) |
| பொன்மணி | → 1. பொன்னால் ஆன மணி | (3ஆம் வே.உ.ப.) |
| | 2. பொன்னோடு சேர்ந்த மணி | (இருபெயரொட்டு) |
| | 3. பொன்னாகிய மணி | (7ஆம் வேற்றுமை) |
| | 4. பொன்னின்கண் மணி | (எண்ணும்மை) |
| | 5. பொன்னும் மணியும் | (2ஆம் வே.உ.ப.) |
| மரவேலி | → 1. மரத்தைக் காக்கும் வேலி | (3ஆம் வே.உ.ப.) |
| | 2. மரத்தாலான வேலி | (4ஆம் வேற்றுமை) |
| | 3. மரத்துக்கு வேலி | (5ஆம் வே.உ.ப.) |
| | 4. மரத்தின் புறத்துவேலி | (6ஆம் வேற்றுமை) |
| | 5. மரத்தினது வேலி | (இருபெயரொட்டு) |
| | 6. மரமாகிய வேலி | |
| சொற்பொருள் | → 1. சொல்லால் அறியப்படும் பொருள் | (3ஆம்வே.உ.ப.) |
| | 2. சொல்லுக்குப் பொருள் | (4ஆம் வேற்றுமை) |
| | 3. சொல்லினது பொருள் | (6ஆம் வேற்றுமை) |
| | 4. சொல்லின்கண் பொருள் | (7ஆம் வேற்றுமை) |
| | 5. சொல்லும் பொருளும் | (எண்ணும்மை) |
| | 6. சொல்லாகிய பொருள் | (இருபெயரொட்டு) |
| | 7. சொல்லானது பொருள் | (எழுவாய்த்தொடர்) |

புலிகொல் யானை → இது பன்மொழித் தொடராகும்.

| | |
|---|---|
| 1. புலியைக் கொன்ற யானை | (2ஆம் வேற்றுமை) |
| 2. புலியானது கொன்ற யானை | (6ஆம் வேற்றுமை) |
| 3. புலியால் கொல்லப்பட்ட யானை | (3ஆம் வேற்றுமை) |

## தொகாநிலைத் தொடர்மொழி
(NON-ELLIPTICAL COMPOUNDS)

நிலைமொழி, வருமொழிகளாகிய இருசொற்களின் இடையில் பிறசொற்கள் வெளிப்பட்டு நிற்கும். ஆதலால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் ஒருமொழித் தன்மையின்றிப் பிளவுபட்டு ஒலிக்கும். அதனைத் தொகாநிலைத் தொடர் என்றும் குறிப்பர். இது ஒன்பதாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.



### தொகாநிலைத் தொடர்மொழிகளின் வகைகள் [ 9 ]

374. *முற்று[1] ஈர் எச்சம்[3] எழுவாய்[4] விளிப்பொருள்[5]*
*ஆறுஉருபு[6] இடை[7]உரி[8] அடுக்கு[9]இவை தொகாநிலை.*

[இ-ள்] 1. வினைமுற்று 2. பெயரெச்சம் 3. வினையெச்சம் 4. எழுவாய் 5. விளி என்னும் ஐந்து பொருள்களில் பெயரும் வினையும் புணரும் புணர்ச்சி 6. இரண்டு முதல் ஏழ் ஈறாகிய வேற்றுமை உருபுகள் விரிந்து நின்று பெயரும் வினையும் புணரும் புணர்ச்சி 7. இடைச்சொல் புணர்ச்சி 8. உரிச்சொல் புணர்ச்சி 9. ஒரு சொல் அடுக்கி வரும் புணர்ச்சி ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடர் மொழிகளாகும். [எ-டு]

| | | | |
|---|---|---|---|
| 1. | வந்தான் சாத்தான் | - தெரிநிலை | வினைமுற்றுத் தொடர் |
| | நல்லன் சாத்தன் | - குறிப்பு | |
| 2. | வந்த பையன் | - தெரிநிலை | பெயரெச்சத் தொடர் |
| | நல்ல பையன் | - குறிப்பு | |
| 3. | பார்த்து வந்தான் | - தெரிநிலை | வினையெச்சத் தொடர் |
| | மெல்ல வந்தான் | - குறிப்பு | |

4. கண்ணன் வந்தான் → எழுவாயத் தொடர்

5. கண்ணா! வா! → விளித் தொடர்

| | | | |
|---|---|---|---|
| 6. | அறத்தைச் செய்தான் | - 2ஆம் | வேற்றுமைத் தொடர் |
| | அன்பால் வென்றான் | - 3ஆம் | |
| | தமிழுக்குத் தந்தான் | - 4ஆம் | |
| | நிலையின் இழிந்தான் | - 5ஆம் | |
| | சாத்தனது வீடு | - 6ஆம் | |
| | காட்டின்கண் யானை | - 7ஆம் | |
| 7. | மற்று ஒன்று கேள் | - | இடைச்சொல் தொடர் |
| 8. | சாலச் சிறந்தது | - | உரிச்சொல் தொடர் |
| 9. | பாம்பு! பாம்பு! | - | அடுக்குத்தொடர். |

### வழாநிலையும் வழுவமைதியும்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நிற்பது தொடர் ஆகும். அச்சொற்கள் தொடருமிடத்து முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபடாமல் (குற்றமில்லாமல்) நிற்பதே இலக்கண முறையாகும். இது வழாநிலை (GRAMMATICAL EXPRESSIONS) எனப்பெறும். சொற்கள் மாறுபட்டு நிற்பது வழு (DEVIATION) எனக் கூறப்படும். வழுவாயினும் முன்னோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை வழுவமைதி (SANCTIONED DEVIATION) ஆகும்.

Scanned with CamScanner

**வழுக்களின் வகைகள் [ 7 ]**

375. திணையே[1] பால்[2] இடம்[3] பொழுது[4] வினா[5] இறை[6]
மரபாம்[7] ஏழும் மயங்கினாம் வழுவே.

[இ-ள்] 1. இருதிணை 2. ஐம்பால் 3. மூன்று இடங்கள் 4. காலம் 5. வினா 6. விடை 7. மரபு என்னும் ஏழும் தத்தம் நெறியில் இருந்து பிறழ்வதே வழுவாகும். [எ-டு]

1. **திணை வழு**
ஒரு திணைச்சொல் மற்றொரு திணைச் சொல்லொடு முடிவது.
அவன் வந்தது → அவன் - உயர்திணை; வந்தது - அஃறிணை

2. **பால் வழு**
ஒரு பாற்சொல் மற்றொரு பாற்சொல்லோடு முடிவது.
அவன் வந்தாள் → அவன் - ஆண்பால்; வந்தாள் - பெண்பால்

3. **இட வழு**
ஓர் இடச்சொல் மற்றோர் இடச்சொல்லோடு முடிவது.
யான் வந்தான் → யான் - தன்மை; வந்தான் - படர்க்கை

4. **கால வழு**
ஒரு காலத்தை உணர்த்தும் சொல் வேறொரு காலம் உணர்த்தும் சொல்லோடு முடிவது.
நாளை வந்தான் → நாளை - எதிர்காலம்; வந்தான் - இறந்தகாலம்

5. **வினா வழு**
வினவப்படக் கூடாத பொருளை வினவுவது.
ஒரு விரலைக் காட்டி இது சிறிதோ? பெரிதோ? என்றல்

6. **விடை வழு**
வினவியதற்குப் பொருத்தமின்றி விடை கூறுதல்.
கடம்பூர்க்கு வழி யாது? எனக் கேட்க அதற்கு இடம்பூணி என் ஆவின் கன்று அன்று எனல்

7. **மரபு வழு**
முன்னோர் கூறிய வழக்கிலிருந்து மாறுபட்டுக் கூறுதல்.
யானை மேய்ப்பானை இடையன் என்றல்; ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றல்.

**திணை பால்களுடன் வினா விடைகள் வழுவாமல் காத்தல்**

376. ஐயம் திணை[1] பால்[2] அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும்[3] விளம்புப.

[இ-ள்] 1. திணையிலும் 2. பாலிலும் ஐயம் தோன்றுவது உண்டு. அவ் இடங்களில் அத்திணைகளுக்கும் பால்களுக்கும் உரிய சிறப்புச் சொல்லால் வினவாது பொதுச்சொல்லால் வினவ வேண்டும் 3. ஐயம் நீங்கி உண்மை தெரிந்த பொருள் மேல் அல்லாத தன்மையை வைத்தும் கூறல் வேண்டுமென உரைப்பர் புலவர். [எ-டு]



**1. திணையில் ஐயம் வினவுதல்**

குற்றியோ மகனோ எனத் திணையில் ஐயம் தோன்றியவிடத்து அங்குத் தோன்றுகின்ற உரு? என வினவ வேண்டும். இதில் உரு என்பது இருதிணைப் பொதுச்சொல். அதை விடுத்துத் தோன்றுகின்றவன் என உயர்திணைச் சொல்லாலோ தோன்றுகின்றது என அஃறிணைச் சொல்லாலோ வினவின் திணை வழுவும் வினா வழுவும் ஏற்படும்.

**2. பாலில் ஐயம் வினவுதல்**

அ) உயர்திணையில் பால் ஐயம் தோன்றியவிடத்துப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும். [எ-டு] ஆண் மகனோ பெண் மகளோ அங்கே தோன்றுகின்றவர்? என வினவ வேண்டும். அதை விடுத்துத் தோன்றுகின்றவன், தோன்றுகின்றவள் எனச் சிறப்புச் சொல்லால் வினவின் பால் வழுவும் வினாவழுவும் ஏற்படும்.

ஆ) அஃறிணையில் பால் ஐயம் தோன்றியவிடத்துப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும். [எ-டு] ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்? (மாடு) இவ்வாறு வினவாமல் பசு, எருது எனச் சிறப்புச் சொல்லால் வினவின் பால் வழுவும் வினா வழுவும் ஏற்படும்.

**3. துணிந்த பொருளைக் கூறும் முறை**

திணையிலும் பாலிலும் ஐயம் நீங்கி உண்மை அறிந்தவிடத்துக்

1. குற்றி என்றால் மகன் அன்று எனவும்
மகன் என்றால் குற்றி அல்லன் எனவும் கூற வேண்டும்
2. ஆண்மகன் என்றால் பெண்மகள் அல்லன் எனவும்
பெண்மகள் என்றால் ஆண்மகன் அல்லள் எனவும் கூற வேண்டும்
3. ஒன்று என்றால் பல அன்று எனவும்
பல என்றால் ஒன்றுஅல்ல எனவும் கூற வேண்டும்

இவ்வாறு துணிவு செய்யப்பட்ட பொருளின் மீது மற்றொன்றின் அல்லாத தன்மையை ஏற்றிக் கூறுதல் வேண்டும்.

**திணை வழுவமைதி**

377. உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.

[இ-ள்] உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்து தானும் எழுவாயாக நிற்கின்ற அஃறிணைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் உயர்திணையோடு சேர்த்து முடிப்பின் அவ்வுயர்திணைக்கு உரிய முடிபைப் பெறும். [எ-டு]

| | | |
|---|---|---|
| நம்பி பொன் பெரியன் | - | பொருள் |
| நம்பி நாடு பெரியன் | - | இடம் |
| நம்பி வாழ்நாள் பெரியன் | - | காலம் |
| நம்பி மூக்குக் கூரியன் | - | சினை |
| நம்பி குடிமை நல்லன் | - | குணம் |
| நம்பி நடை கடியன் | - | தொழில் |

Scanned with CamScanner

இவற்றுள் நம்பி என்னும் பெயர் உயர்திணை எழுவாய்; பொன் முதலான ஆறும் அஃறிணை எழுவாய். இவை உயர்திணைக்கு உரிய பயனிலையைக் கொண்டு முடிந்தன.

தொடர்தலாவது : அஃறிணைப் பொருள் முதலிய ஆறும் உயர்திணைக்கு உரிமையுடைய பொருள்களாய் நிற்றலாகும்.

சார்த்தலாவது : அஃறிணைப் பொருள் முதலியவற்றின் தன்மையை அவற்றை உடைய உயர்திணையின் மேல் ஏற்றிக் கூறுதல்.

கிணறு நீர் ஊறிற்று
மாடு கோடு கூரிது

என்பன அஃறிணையோடு சார்த்திக் கூறப்பட்டதால் அஃறிணை முடிபைப் பெற்றன.

நம்பி பொன் பெரிது என்பது வழாநிலை
நம்பி பொன் பெரியன் என்பது வழுவமைதி.

**திணை, பால், மரபு வழுவமைதி [ 3 ]**

378. *திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்[1]*
*மிகவினும்[2] இழிபினும்[3] ஒருமுடி பினவே.*

[இ-ள்] திணைகள், பால்கள் வெவ்வேறு வினைகளுக்கு உரிய பல பொருள்கள் தம்முள் கலந்து ஒரு தொடராக அமையும். அவை 1. சிறப்பு 2. மிகுதி 3. இழிபு ஆகியவற்றால் ஒன்றற்குரிய முடிபைப் பெறும். [எ-டு]

**திணை கலந்து வருதல்**

**1. சிறப்பு : திங்களும் சான்றோரும் ஒப்பர்**

திங்கள் - அஃறிணை; சான்றோர் - உயர்திணை. சிறப்பினால் அஃறிணையாகிய திங்கள் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றது.

**2. மிகுதி : பார்ப்பார்[1] தவரே[2] சுமந்தார்[3] பிணிபட்டார்[4]**
**மூத்தார்[5] இளையர்[6] பசுப்[7] பெண்டிர்[8] என்றிவர்கள்**

என்னும் எட்டனுள் பசு ஒன்றே அஃறிணை; எஞ்சிய ஏழும் உயர்திணை. எனவே மிகுந்த எண்ணிக்கையால் இவர்கள் என உயர்திணை முடிபைப் பெற்றன.

**3. இழிபு : மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா**

இத்தொடரில் மூர்க்கன் - உயர்திணை; முதலை - அஃறிணை. இழிபினால் அஃறிணைக்குரிய விடா என்னும் வினை கொண்டு முடிந்தது.

**பால் கலந்து வருதல்**

சிறப்பு : **"தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்"**

இத்தொடரில் தையல் (உமாதேவி) பெண்பால்; தாழ்சடையோன் (சிவன்) ஆண்பால். இவ்வாறு விரவி நின்றும் சிறப்பால் ஆண்டிலன் என ஆண்பால் முடிபைப் பெற்றது.



**பலபொருள் கலந்து வருதல்**

**சிறப்பு : கறியும் சோறும் உண்டான்**

இத்தொடரில் கறி என்பது தின்னற்கு உரியது; சோறு உண்ணற்கு உரியது. எனவே கறி தின்றான்; சோறு உண்டான் என வர வேண்டும். கறியைக் காட்டிலும் சோற்றுக்குத் தலைமைச் சிறப்புண்டு. அக்காரணம் பற்றி உண்டான் என்னும் வினை முடிபு கொண்டது.

**திணை, பால் வழுவமைதி [ 5 ]**

379. *உவப்பினும்[1] உயர்வினும்[2] சிறப்பினும்[3] செறலினும்[4]*
*இழிப்பினும்[5] பால்திணை இழுக்கினும் இயல்பே.*

[இ-ள்] 1. மகிழ்ச்சி 2. உயர்வு 3. சிறப்பு 4. சினம் 5. பழிப்பு என்னும் ஐந்து காரணங்களால் பாலும் திணையும் வழுவி வந்தாலும் அவை வழுவமைதி ஆகும். [எ-டு]

1. மகிழ்ச்சி : **தன் புதல்வனைத் தாய், என் அம்மை வந்தாள்** எனக் கூறுதல். புதல்வனாகிய ஆண்பால் மகிழ்ச்சியினால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

2. உயர்வு : **அவர் வந்தார்** என ஒருவனைக் கூறுதல். ஒருவன் எனக் கூற வேண்டியது உயர்வின் காரணமாக அவர் எனப் பலர்பாலாகக் கூறப்பட்டது.

3. சிறப்பு : மன்னனை **மூவேழ் உலகிற்கும் தாயே** எனக் கூறுதல். ஆண்பாலாகிய மன்னன் இங்குச் சிறப்பின் காரணத்தால் பெண்பாலாகச் (தாய்) சுட்டப்பட்டுள்ளான்.

4. சினம் : **எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறன்இல் புகல்.**

இக்குறட்பாவில் எனைத்துணையர் என்பது பன்மைப்பால். சினத்தின் காரணமாகத் தேரான் என ஒருமைப் பாலில் கூறப்பட்டது.

5. இழிபு : **பெண்வழிச் செல்வானைப் பெண் எனல்.** பெண்ணின் பின்னர்ச் செல்பவன் ஆண். அச்செயல் இழிவானது. எனவே அதன் காரணமாகச் செல்வான் என்னும் ஆண்பால், பெண்பாலாகக் கூறப்பட்டது.

**பால், இட வழுவமைதி**

380. *ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்[1]*
*ஓரிடம் பிறஇடம் தழுவலும்[2] உளவே.*

[இ-ள்] 1. ஒன்றன் பாலில் பலவின்பால் சொல்லையும் பலவின் பாலில் ஒன்றன்பால் சொல்லையும் 2. ஓரிடத்தில் பிற இடச்சொல்லையும் தழுவிக் கூறுதலும் உண்டு. [எ-டு]

**1. பால் மயங்குதல்**

**அ] ஒருமைப்பன்மை மயக்கம்**

வெயில் எல்லாம் மறைத்தது மேகம் - இத்தொடரில் வெயில் என்பது ஒருமைப்பால்; எல்லாம் என்பது பன்மைப்பாற் சொல். இவை சேர்த்துக் கூறப்பட்டதால் மயக்கமாயின.

Scanned with CamScanner

**ஆ] பன்மை ஒருமை மயக்கம்**

இரண்டு கண்ணும் சிவந்தது - இத்தொடரில் இரண்டு என்பது பன்மைப்பால். இது சிவந்தது என்னும் ஒருமைப்பாற் சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் மயக்கமாயிற்று.

**2. இடம் மயங்குதல்**

**அ] தன்மைப் படர்க்கை மயக்கம்**

சாத்தான் தாய் இவை செய்வலோ - இது சாத்தனுடைய தாயின் கூற்றாகும். இத்தொடர் சாத்தனின் தாயாகிய யான் எனத் தன்மையில் கூற வேண்டும். அதை விடுத்துத் தாய் எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் இது தன்மைப் படர்க்கை மயக்கமாயிற்று.

**ஆ] முன்னிலைப் படர்க்கை மயக்கம்**

எம்பியை இங்குப் பெற்றேன். இது அண்ணனின் கூற்றாகும். இத்தொடரில் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கி நின்னை எனக் கூற வேண்டும். அதை விடுத்து எம்பியை எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் இது முன்னிலைப் படர்க்கை மயக்கமாயிற்று.

**இ] தன்மை, முன்னிலை, படர்க்கை மயக்கம்**

| | |
|---|---|
| நீயோ அவனோ யாரிது செய்தார் | - முன்னிலை, படர்க்கை |
| யானோ அவனோ யாரிது செய்தார் | - தன்மை, படர்க்கை |
| நீயோ யானோ யாரிது செய்தார் | - முன்னிலை, தன்மை |
| நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் | - முன்னிலை, படர்க்கை, தன்மை. |

**இடம் வழுவாமல் காத்தல் [ 4 ]**

381. *தரல்[1]வரல்[2] கொடை[3]செலல்[4] சாரும் படர்க்கை;*
*எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.*

[இ-ள்] 1. தரல் 2. வரல் 3. கொடை 4. செலல் என்னும் இந்நான்கு சொற்களும் படர்க்கையில் வரும். இவற்றுள் முதலில் நின்ற தரல், வரல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை, முன்னிலைகளை ஏற்கும். [எ-டு]

| | |
|---|---|
| அவனுக்குத் தந்தான்<br>அவனிடத்து வந்தான்<br>அவனுக்குக் கொடுத்தான்<br>அவனிடத்துச் சென்றான் | } இவை நான்கும் படர்க்கையைச் சார்ந்து நின்றன |
| எனக்குத் தந்தான்<br>என்னிடத்து வந்தான் | } தரல், வரல் தன்மையில் வந்தன |
| உனக்குத் தந்தான்<br>உன்னிடத்து வந்தான் | } தரல், வரல் முன்னிலையில் வந்தன. |



கொடை, செலல் என்பன படர்க்கைக்கே சிறந்தன. எனவே படர்க்கைக்கு உரிமை பூணுதல் வழாநிலையாகும். இவை தன்மை, முன்னிலைக்கு வாரா. வரின் இட வழுவமைதியாகும். [எ-டு]

| | | |
|---|---|---|
| எனக்குக் கொடுத்தான் | → | தன்மை |
| நின்பால் சென்றான் | → | முன்னிலை |

தரலும், வரலும் படர்க்கை இடத்து வருதல் வழுவமைதியாகும் [எ-டு]

பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த → படர்க்கை → தரல்
வருவிருந்து பார்த்திருப்பான் → படர்க்கை → வரல்

இந்நூற்பாவில் கூறப்பட்ட தரல் முதலிய நான்கு சொற்களும் பகுதிகளை உணர்த்தின. இவை தருதல், வருதல், கொடுத்தல், செல்லல் என்னும் தொழிற்பெயர்களாக நிற்கும். தந்தான், வந்தான், கொடுத்தான், சென்றான் என்பன போல வினைகளைத் தோற்றுவிக்கும். எனவே அவ்வினைச் சொற்கள் அனைத்தையும் கொள்ளல் வேண்டும்.

**கால வகைகள் [ 3 ]**

382. *இறப்பு[1]எதிர்வு[2] நிகழ்வு[3] எனக்காலம் மூன்றே.*

[இ-ள்] முன் சொல்லப்பட்ட காலம் 1. இறந்த காலமும் 2. எதிர் காலமும் 3. நிகழ்காலமும் என மூன்றாம்.

| | | |
|---|---|---|
| இறப்பு | → | நடந்ததை உரைப்பது |
| எதிர்வு | → | நடக்கப் போவதைக் குறிப்பது |
| நிகழ்வு | → | நடந்து கொண்டிருப்பதைக் காட்டுவது |

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் கூறாமல் இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் கூறப்பட்டது. நிகழ்காலம் மற்றைய காலங்களுக்கும் உரியதாகும் தன்மை கருதி முறைமாற்றி உரைக்கப்பட்டது.

**கால வழுவமைதி**

383. *முக்கா லத்தினும் ஒத்துஇயல் பொருளைச்*
*செப்புவர் நிகழும் காலத் தானே.*

[இ-ள்] இடைவிடாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலச் சொல்லால் சொல்லுவர் புலவர். [எ-டு]

உலகம் சுற்றுகிறது; மலை நிற்கிறது; கடவுள் கொடுக்கின்றார்.

உலகம் நேற்றும் சுற்றியது; இன்றும் சுற்றுகிறது; நாளையும் சுற்றும். எனவே இச்செயலை உலகம் சுற்றுகிறது என நிகழ்காலச் சொல்லால் சொல்ல வேண்டும்.

Scanned with CamScanner

**காலம் மயங்குதல்**

384. *விரைவினும்¹ மிகவினும்² தெளிவினும்³ இயல்பினும்⁴*
*பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி.*

[இ-ள்] 1. விரைவினாலும் 2. மிகுதியினாலும் 3. தெளிவினாலும் 4. இயல்பினாலும் மூன்று காலங்களுள் ஒன்று மற்றொன்றாக ஏற்கும் இடங்களில் மாற்றிச் சொல்லவும் பெறும். [எ-டு]

**1. விரைவு :** நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலமாதல்.

உண்ண இருப்பவனை விரைவாக அழைத்துப்போக வேண்டிய மற்றொருவன் உண்ணவில்லையோ? என வினவுவான். அவ்விடத்து விரைவின் காரணமாக உண்ணாமலேயே அவன் **'உண்டேன் உண்டேன்'** எனக் கூறுவான். உண்பவனையும் உண்ணவில்லையோ என வினவிய இடத்து **'உண்டேன் உண்டேன்'** என்று கூறுவான்.

இவ்விடங்களில் விரைவின் காரணமாக எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

**2. மிகுதி :** எதிர்காலம் இறந்த காலமாதல்.

**நீ அவனுடன் பகைத்தால் இறந்தாய்.** இத்தொடர் சிறுபான்மை உயிர் தப்பினும் பெரும்பான்மை கொல்லப்படுதலால் மிகுதியாயிற்று. பகைத்தால் என்னும் எதிர்காலம் இறந்தாய் என இறந்த காலமாய் நின்றது.

**3. தெளிவு :** எதிர்காலம் இறந்த காலமாதல்.

**அறம் செய்யின் சுவர்க்கம் புக்கான்.** இத்தொடர் தெளிவின் காரணமாகச் செய்யின் என்னும் எதிர்காலம் புகுந்தான் என இறந்த காலமாய் நின்றது. அறம் செய்தால் சுவர்க்கத்துக்குச் செல்லலாம் என்பது நூல்களைக் கொண்டு தெளிந்தமையின் தெளிவாயிற்று.

**4. இயல்பு :** இறந்தகாலம் எதிர் காலமாதல்.

**யான் முன்னே விளையாடுவது இச்சோலை.** இத்தொடர் வேறொரு காரணம் இன்மையால் இயல்பினால் இறந்த காலம் எதிர்காலமாயிற்று. முன் என்பது இறந்த காலம். விளையாடுவது என்பது எதிர்காலம்.

## வினா

அறிய வேண்டுவதை வெளிப்படுத்துவது வினாவாகும். இவ்வினா பலவகைப்படும்.

**வினாவின் பெயரும் தொகையும் [ 6 ]**

385. *அறிவு¹அறி யாமை² ஐயுறல்³ கொளல்⁴கொடை⁵*
*ஏவல்⁶ தரும்வினா ஆறும் இழுக்கார்.*



[இ-ள்] 1. அறிதல் 2. அறியாமை 3. ஐயப்படுதல் 4. வாங்கிக் கொளல் 5. கொடுத்தல் 6. ஏவுதல் ஆகிய அறுவகைப் பொருளையும் தருகின்ற வினாக்களையும் தவறாமல் கொள்வர் புலவர்.

வினவுவோரின் இயல்பையும் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் ஆறாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

**1. அறிவினா**

தான் அறிந்து கொண்ட ஒரு பொருளைப் பிறர் அறிந்திருக்கிறாரா? என்பதை அறிதற் பொருட்டு வினவுவது. [எ-டு] **இந்நூற்பாவிற்குப் பொருள் யாது?** என ஆசிரியர் மாணவனைக் கேட்டல்.

**2. அறியா வினா**

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்ள வினவுவது. [எ-டு] **மாணவன், இதன் பொருள் யாது?** என ஆசிரியரைக் கேட்டல்.

**3. ஐய வினா**

தெளிவின்றி ஐயமாய் இருக்கும் பொருளை வினவுவது. [எ-டு] **குற்றியோ? மகனோ?**

**4. கொளல் வினா**

தான் ஒரு பொருளைக் கொள்வதற்காக அப்பொருளைப் பற்றி வினவுவது. [எ-டு]
**பயறு உளவோ? வணிகரே** எனல்.

**5. கொடை வினா**

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக அப்பொருள் பற்றிப் பிறரை வினவுவது. [எ-டு]
**சாத்தற்கு ஆடை இல்லையோ?**

**6. ஏவல் வினா**

ஒரு தொழிலைச் செய்யும் படி ஏவுவது. [எ-டு]

**கொற்றா! உண்டாயோ? இல்லையெனில் உண்** என ஏவுதல்.

## விடை அல்லது செப்பு

வினவியதற்கு மறுமொழி கூறுதல் விடை ஆகும். அது 1. செவ்வன் இறை 2. இறை பயப்பது என இரு வகைப்படும். செவ்வன் இறை என்பது நேராக விடை தருவது. இறை பயப்பது என்பது விடையைக் குறிப்பால் தருவது ஆகும்.

**விடையின் பெயரும் தொகையும் [ 3 + 5 = 8 ]**

386. *சுட்டு¹ மறை²நேர்³ ஏவல்⁴ வினாதல்⁵*
*உற்றது உரைத்தல்⁶ உறுவது கூறல்⁷*
*இனமொழி⁸ எனும்எண் இறையுள் இறுதி*
*நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப.*

[இ-ள்] 1. சுட்டிக் கூறுதல் 2. எதிர் மறுத்துக் கூறுதல் 3. உடன்பட்டுக் கூறுதல் 4. எதிராக ஏவுதல் 5. வினவியதற்கு எதிராக வினவுதல் 6. நேர்ந்ததைச் சொல்லுதல் 7. நேர்வதைச் சொல்லுதல் 8. வினவியதற்கு இனமானதைச் சொல்லுதல் என்பன எட்டும் விடைகளாகும். இவற்றுள் இறுதியில் நிற்கும் ஐந்தும் அவ்விடைப் பொருளைக் குறிப்பால் தரும். ஆயினும் அவற்றையும் விடைகள் எனத் தழுவிக் கொள்ளுவர் புலவர்.

சுட்டு முதலிய மூன்றும் வெளிப்படையாக விடை தருவன. எஞ்சிய ஐந்தும் விடைகளாகக் கொள்ளப்படுவன. இவை குறிப்பால் விடையை உணர்த்துவன. [எ-டு]

**நேர்விடை – வெளிப்படை [ 3 ]**

1. சுட்டு
   வஞ்சிக்கு வழி யாது? எனில் இது எனச் சுட்டிக் காட்டுவது.
2. மறை
   இது செய்வாயோ? என்பதற்குச் செய்யேன் என்று மறுத்துக் கூறுவது.
3. நேர்
   செய்வாயோ? என்பதற்குச் செய்வேன் என உடம்படுவது.

**குறிப்பு விடை [ 5 ]**

1. ஏவல் : செய்வாயோ? என்பதற்கு நீ செய் எனக் கூறுவது.
2. வினாதல் : செய்வாயோ? என்பதற்குச் செய்வேனோ? எனக் கூறுவது.
3. உற்றது உரைத்தல் : உடம்பு நொந்தது எனக் கூறுவது (நடந்ததைக் கூறுவது)
4. உறுவது கூறல் : உடம்பு நோவும் எனக் கூறுவது (இனி நடப்பதைக் கூறுவது)
5. இனமொழி : மற்றதைச் செய்வேன் எனக் கூறுவது.

**வினா, விடைகளில் முதல் சினை வழுவாமை**

327. *வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்.*

[இ-ள்] வினவும் போதும் விடை கூறும் போதும் சினையும் முதலும் ஒன்றென வைத்து முதலொடு சினையும் சினையொடு முதலும் மயங்கும் படி சொல்லப்படாவாம். [எ-டு]

*கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ?*
*சாத்தன் நல்லனோ? கொற்றன் நல்லனோ?*

இவ்வாறு வினவுமிடத்துக் கண் பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது சாத்தன் நல்லன் கொற்றன் நல்லன் என விடை தருதல் வேண்டும். கண்ணை உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாலோ? கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும் இவள் பிறழ்ந்தாள் என விடை கொடுத்தலும் வழுவாம்.



**மரபின் இலக்கணம்**

388. *எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.*

[இ-ள்] எந்த ஒரு பொருளை எந்தச் சொல்லால் எம்முறையால் அறிவுடையோர் சொன்னார்களோ அந்தப் பொருளை அச்சொல்லால் அம்முறையில் சொல்லுதலே மரபாகும். [எ-டு]

| | | |
|---|---|---|
| குதிரைக்குட்டி; | | மரபு வழாநிலை |
| யானைக் கன்று; | பசுவின் கன்று | |
| யானையிலத்தி; | மாட்டுச் சாணம் | |
| யானைப் பாகன்; | ஆட்டு இடையன் | |
| பசுவின் குட்டி; | குதிரைக் குஞ்சு | மரபு வழு |
| யானைச் சாணம்; | ஆட்டுப் பாகன் | |

**மரபு வழாநிலை – வேறுவினைப் பொதுச்சொல்**

389. வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்.

[இ-ள்] வேறுவேறு வினையுடையவாய் நின்ற பொருள்களை ஒருவினையால் சொல்லாது பொதுவினையால் சொல்லுதல் வேண்டும். இங்ஙனம் பல்வேறு வினைகளுக்கும் பொதுவாகிய பொருள்களைப் பிரித்து எண்ணிய வழியும் சிறப்பு வினை கூறாது பொதுவினை கொடுத்தல் வேண்டும். [எ-டு]

அடிசில் - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவனவற்றிற்குப் பொது
அணி - கவிப்பன, கட்டுவன, செறிப்பன, பூண்பனவற்றிற்குப் பொது
இயம் - கொட்டுவன, ஊதுவன, எழுப்புவனவற்றிற்குப் பொது
படை - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொது

எனவே இவற்றைச் சொல்லும் போது பொது வினையால் கூற வேண்டும். [எ-டு]

| | | |
|---|---|---|
| அடிசில் | - அயின்றார், மிசைந்தார் | பொதுவினை |
| அணி | - அணிந்தார், மெய்ப்படுத்தார் | |
| இயம் | - இயம்பினார், படுத்தார் | |
| படை | - வழங்கினார், தொட்டார் | |

பிரித்து எண்ணும் போதும் பொதுவினையால் கூற வேண்டும். [எ-டு]
சோறு உண்பதற்கு உரியது; கறி தின்பதற்கு உரியது.
யாழ் இசைப்பதற்கு உரியது. குழல் ஊதுவதற்கு உரியது. இவற்றைச்,

| | |
|---|---|
| சோறும் கறியும் அயின்றார் | பொதுவினை |
| யாழும் குழலும் இயம்பினார் | |

எனப் பொதுவினை கொடுத்துக் கூறுதல் வேண்டும்.

Scanned with CamScanner

சோறும் கறியும் தின்றார் } சிறப்புவினை
யாழும் குழலும் ஊதினார்

என ஒன்றற்குரிய சிறப்பு வினையால் கூறுவது வழுவாம்.

சிலநாள் சோறும் (உண்பது) சிலநாள் மாவும் (தின்பது)

சிலநாள் பாலும் சிலநாள் நீரும் (பருகுவது) அயின்றார்.

வேறுவேறு வினைகளுக்குரியவை பொதுவினைச் சொல்லைக் கொண்டு முடிந்தன.

## பலபொருள் ஒருசொல்

ஒருசொல் ஒருபொருளைக் குறித்தே வழங்கப்பெறும். ஒரு சில சொற்கள் பல பொருள்களை விளக்குவனவாக அமைந்துள்ளன. இவற்றைப் பலபொருள் ஒருசொல் என்று கூறுவர். இவை பல பொருள்களைக் குறிப்பதால் பொருள் விளங்காமல் மயக்கத்தை ஏற்படுத்துவன.

### பலபொருள் ஒருசொல் பொருள் அறியும் முறை

390. வினை[1] சார்பு[2] இனம்[3] இடம்[4] மேலி விளங்காப்
பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்புஎடுத்தே.

[இ-ள்] 1. வினை 2. சார்பு 3. இனம் 4. இடம் ஆகிய சொற்களுள் ஒன்றைப் பொருந்தி ஒரு குறிப்பிட்ட பொருளை விளக்குவது பலபொருள் ஒருசொல். அவ்வாறு விளக்காத இடத்து அப்பொருளுக்குரிய சிறப்புச் சொல்லைக் கூட்டிப் பொருள் விளங்கச் செய்வர் புலவர்.

வினை முதலியவற்றால் பொருள் விளங்க வைப்பது ஒருவகை. மா என்பது மாமரம், வண்டு, குதிரை, திருமகள் போன்ற பல பொருள்களைத் தருகின்ற ஒரு சொல்லாகும்.[எ-டு]

1. மா பூத்தது → பூத்தது என்னும் வினையால் மரத்தைக் குறித்தது.
2. மா வீழ் மலர் → மலர் என்னும் சார்பால் வண்டைக் குறித்தது.
3. யானைத் தேர் மா → யானைப் படை முதலிய இனத்தால் குதிரையைக் குறித்தது.
4. மா வீழ் மார்பன் → மார்பு என்னும் இடத்தால் திருமகளைக் குறித்தது.

சிறப்புச் சொல்லைக் (அடைமொழி) கூட்டிப் பொருள் விளங்க வைப்பது மற்றொரு வகை.

மா ஏறினான் என்ற வழி ஏறினான் என்ற வினையால் மரத்தில் ஏறினானா? குதிரையில் ஏறினானா? என்ற ஐயம் ஏற்படுகிறது. இவ்ஐயத்தைப் போக்கப் பாய்மா ஏறினான். மாமரம் ஏறினான் எனச் சிறப்புச் சொல்லை (அடை) முன்னோ பின்னோ சேர்த்துக் கூறி ஐயத்தைப் போக்க வேண்டும்.



## எழுத்தியல் திரியாச் சொற்கள்

எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்பட நிற்கின்ற தொடர்மொழிகள் உள. அவை எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழிகள் எனப்படும்.

### ஓசை வேறுபாட்டால் பொருள் தரும் சொற்கள்

391. எழுத்துஇயல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளிவு எய்தும் என்ப.

[இ-ள்] எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு நிற்கும் தொடர் மொழிகள், குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துச் (ஒலியை வரையறுத்துச்) சொல்லும் வேறுபாட்டால் பொருள் இன்னதெனத் துணியப்படும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. செம்பொன்பதின்தொடி என்பது எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி. இத்தொடரைப் பொன்னின் நிறை எனக் கொண்டால்,
செம்பொன் + பதின் தொடி (பத்துப்பலம்) எனவும்
செம்பின் நிறை எனக் கொண்டால்,
செம்பு + ஒன்பதின் தொடி (ஒன்பது பலம்) எனவும் பிரிக்கப் பெறும்.
2. நாகன்றேவன்போத்து
நாகன் + தேவன் + போத்து → நாகனும் தேவனும் போத்தும்
நாகன் + தேவன்போத்து → நாகன் தேவனின் எருமை
நாகன்றே + வன்போத்து → எருமையன்று; வலிய எருமைக்கடா
3. குன்றேறாமா
குன்று + ஏறு + ஆமா → குன்றின் மீது ஏறும் காட்டுப் பசு
குன்று + ஏறா + மா → குன்றின் மேல் ஏற முடியாத விலங்கு
4. குறும்பரம்பு
குறும்பர் + அம்பு → குறுநில மன்னரின் அம்பு
குறும் + பரம்பு → கழனி திருத்தும் சிறுபலகை
5. புத்தியில்லாதவன்
புத்தி + இல்லாதவன் → அறிவற்றவன்
புத்தியில் + ஆதவன் → சூரியனைப் போல் ஒளிரும் அறிவுடையவன்
6. தாமரைக்கணியார்
தாமரை + கணியார் → தாமரை போன்ற கண்களை உடையவர்
தா + மரைக்கணியார் → தாவுகின்ற மானின் கண்களை உடையவர்
தாம் + அரைக்கணியார் → அரைக்கண்ணால் பார்க்கின்றவர்
தாம் + அரைக்கு + அணியார் → இடையில் ஆடை அணியாதவர்.

Scanned with CamScanner

**ஒருபொருள் பலபெயர் பெறுதல்**

392. *ஒருபொருள் மேல்பல பெயர்வரின் இறுதி*
*ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி.*

[இ-ள்] ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமாயின் பொருள் ஒன்றே என்பது விளங்க இறுதிக்கண் ஒருவினை கொடுத்துக் கூறுவர். சில இடங்களில் பொருள் ஒன்றே என்பது விளங்குகின்ற நிலையில் பெயர்தொறும் தனித்தனியே ஒரு முடிக்கும் சொல்லைக் கொடுத்தும் கூறுவர். [எ-டு]

1. **ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன்** வந்தான். இளங்கண்ணன் என்னும் ஒருவனுக்குப் பல பெயர்கள் வந்ததால் இறுதியில் வந்தான் என ஒரு வினையைக் கொண்டு முடிந்தது.

2. **எந்தை வருக! எம் பெருமான் வருக!**
**மைந்தன் வருக! மணாளன் வருக!**

என்னும் இத்தொடரில் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்கள் (எந்தை, பெருமான், மைந்தன். மணாளன்) அமைந்துள்ளமை தெளிவாக உணரப்பட்டது. எனவே பல பெயர்களும் தனித்தனி வினைகளைக் கொண்டு முடிந்தன.

## சிறப்புப் பெயர் - இயற்பெயர்

ஒருவருக்குக் காரணம் கருதியும் கருதாமலும் இடப்படும் பெயர் இயற்பெயர் ஆகும். சிறப்பின் காரணமாக ஒருவருக்கு அமையும் பெயர் சிறப்புப் பெயர்ஆகும். இவ்விரு பெயர்ஆலும் ஒருவர்அழைக்கப் பெறுதல் உண்டு.

**சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் வருதல்**

393. *திணை[1] நிலம்[2] சாதி[3] குடியே[4] உடைமை[5]*
*குணம்[6] தொழில்[7] கல்வி[8] சிறப்பாம் பெயரோடு*
*இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே.*

[இ-ள்] 1. குறிஞ்சி முதலிய ஐந்திணை 2. நிலம் (தேயம்) 3. சாதி 4. குடி 5. உடைமை 6. குணம் 7. தொழில் 8. கல்வி ஆகியவற்றால் அமைவது சிறப்புப் பெயராகும். அப்பெயருடன் இயற்பெயரும் ஒருங்கே வருமானால் சிறப்புப் பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னும் கூற வேண்டும். [எ-டு]

| இயற்பெயர் பின் வருதல் | | | முன் வருதல் |
|---|---|---|---|
| குன்றவன் கொற்றன் → | (திணை) | ← | கொற்றன் குன்றவன் |
| அருவாளன் அழகன் → | (நிலம்) | ← | அழகன் அருவாளன் |
| வணிகன் கோவலன் → | (சாதி) | ← | கோவலன் வணிகன் |
| சோழன் மனுநீதி → | (குடி) | ← | மனுநீதிச் சோழன் |
| பொன்னன் நம்பி → | (உடைமை) | ← | நம்பி பொன்னன் |
| கரியன் கம்பன் → | (குணம்) | ← | கம்பன் கரியன் |
| நடையன் சாத்தன் → | (தொழில்) | ← | சாத்தன் நடையன் |
| புலவன் வள்ளுவன் → | (கல்வி) | ← | வள்ளுவன் புலவன் |



இயற்பெயர் பின் வருதல் வழாநிலையாகும். அது முன் வருதல் வழுவமைதி ஆகும்.

**சுட்டுப்பெயர் வருதல்**

394. *படர்க்கைமுப் பெயரோடு அணையின் சுட்டுப்*
*பெயர்பின் வரும்;[1] வினை எனில்பெயர்க்கு எங்கும்*
*மருவும்[2] வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி.[3]*

[இ-ள்] 1. படர்க்கைக்குரிய உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், பொதுப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடு சுட்டுப்பெயர் சேர்ந்தால் அங்கு வினையாகிய கொண்டு முடியும் சொல் வரும்போது அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயருக்கும் பின்னால் வரும் 2. வினையாகிய முடிக்கும் சொல் இல்லையானால் அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வரும். 3. இவ்விலக்கணம் உலக வழக்காகும். செய்யுளில் இந்நியதியின்றி வரும். [எ-டு]

1. **படர்க்கை முப்பெயர்க்குப் பின் சுட்டு வருதல்**

| | |
|---|---|
| நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக | → உயர்திணை |
| எருது வந்தது அதற்குப் புல்லிடுக | → அஃறிணை |
| சாத்தன் வந்தான் அவனுக்குச் சோறிடுக | } விரவுப்பெயர் |
| சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக | } விரவுப்பெயர் |

2. **படர்க்கை முப்பெயருக்குப் பின்னும் முன்னும் சுட்டு வருதல்**

| | |
|---|---|
| நம்பி அவன் - அவன் நம்பி | → உயர்திணைப் பெயர் |
| குதிரை அது - அது குதிரை | → அஃறிணைப் பெயர் |
| சாத்தன் இவன் - இவன் சாத்தன் | } விரவுப்பெயர் |
| இது சாத்தன் - இது சாத்தன் | } விரவுப்பெயர் |

3. **செய்யுளில் சுட்டுப்பெயர் முன் வருதல்**

**அவன்அணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்**
**விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி.**

இச்செய்யுள் தொடரில் சேந்தன் என்னும் இயற்பெயருக்கு முன் அவன் என்னும் சுட்டுப்பெயர்வந்தது. சுட்டுப்பெயர்வழக்கிடத்து வினை நிகழ் வழிப் பின் வருதல் வழா நிலையாகும். சுட்டுப்பெயர் செய்யுளில் பின் வருதல் வழாநிலையாகும். முன் வருதல் வழுவமைதி.

Scanned with CamScanner

## அடுக்குத் தொடர்

ஒரு சொல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டு அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் ஆகும். யாப்பியலார் அடுக்கை இரட்டைத் தொடை எனக் கூறுவர். அணியியலார் அடுக்கைச் சொற்பின் வருநிலையணி என்று கூறுவர்.

### சொற்கள் அடுக்கி வருதல்

*395. அசைநிலை[1] பொருள்நிலை[2] இசைநிறைக்[3] கொருசொல்*
*இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும்.*

[இ-ள்] 1. அசைநிலைக்கும் 2. விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் போன்ற பொருள் நிலைக்கும் 3. இசையை நிறைப்பதற்கும் ஒருசொல் இரண்டு முறை, மூன்று முறை, நான்கு முறை அடுக்கி வரும். இவ்வாறு பொதுபடக் கூறப்பட்டாலும்

1. அசைநிலையில் இருமுறை அடுக்கி வரும்.
2. பொருள் நிலையில் இருமுறை, மும்முறை அடுக்கி வரும்
3. இசைநிறையில் 2,3,4 முறை அடுக்கி வரும். [எ-டு]

1. அசைநிலை → அன்றே அன்றே (இருமுறை)
2. பொருள் நிலை

உண்டேன் உண்டேன்; போ போ போ → விரைவு
எய் எய்; எறி எறி → வெகுளி
வருக வருக; பொலிக பொலிக பொலிக → உவகை
பாம்பு பாம்பு; தீத்தீத்தீ → அச்சம்
உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் → துன்பம்

3. இசை நிறை

1. ஏஏ. இவள் ஒருத்தி பேடியோ → 2 முறை
2. நல்குமே நல்குமே நல்குமே நாமகள் → 3 முறை
3. பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ → 4 முறை

### இரட்டைக்கிளவி

*396. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்துஇசையா.*

[இ-ள்] இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் அவ்இரட்டித்தலில் இருந்து பிரிந்து (தனித்து) ஒலிக்க மாட்டா.

இரட்டித்து நின்று பொருள் தரும் இச்சொல்லைப் பிரித்துக் கூறின் பொருள்தோன்றாது. எனவே இவற்றை இரட்டித்துக் கூறுதலே மரபாகும். [எ-டு]

*சலசல மும்மதம் பொழிய*
*குறுகுறு நடந்து*
வற்றிய ஓலை கலகலக்கும்

துடிதுடித்துத் துள்ளி வரும் என்னும் தொடரில் அமைந்த துடித்து என்பது பிரிந்து ஒலிக்கும். ஆயினும் முன் உள்ள துடி என்பது பிரிந்து ஒலிக்காமையால் இரட்டைக் கிளவியே ஆகும்.



### ஒருபொருள் பலபெயர்

*397. ஒருபொருள் பல்பெயர் பிரிவில வரையார்.*

[இ-ள்] ஒரு பொருளுக்கே பல பெயர்களைக் கூறும் போது அப்பொருளில் இருந்து பிரிக்க இயலாதவற்றை நீக்காமல் ஏற்றுக் கொள்வர். எனவே பிரிவுள்ளனவற்றை ஏற்றுக் கொள்ளார். [எ-டு]

**ஆசிரியன் பேரூர் கிழான் சாத்தன்** வந்தான்.
**பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** வந்தான்.

இவற்றுள் முதல் தொடரில் ஆசிரியன், பேரூர்கிழான், சாத்தன் என்பன மூன்றும் ஒருபொருளுக்கே சென்று கேட்போருக்குச் சொல்லுவான் குறித்த பொருளை விளக்கி நிற்றலால் சேர்த்துக் கூறப்பட்டன.

பின்னதில் நான்கு பெயரும் ஒருபொருளுக்கே சென்றதால் சேர்த்துக் கூறப்பட்டன.

### ஒரு பொருள் பன்மொழி (SYNONYM)

*398. ஒருபொருள் பன்மொழி சிறப்பி னின்வழா.*

[இ-ள்] ஒரு பொருளைக் குறித்து வருகின்ற பல சொற்கள் அவ்வாறு வருவதற்கு ஒரு காரணமும் இல்லையாயினும் சிறந்து நிற்பதால் அவை மரபு வழு என்று நீக்கப்படாமல் வழுவமைதியாகக் கொள்ளப்படும். [எ-டு]

**மீமிசை** ஞாயிறு → மேல் மேல் உயர்ந்த (உச்சியில் உள்ள ஞாயிறு)
**புனிற்று இளங்கன்று** → புனிறு - இளமை (பிறந்த கன்று)
**நாகு இளம்கமுகு** → நாகு - இளமை (மிக இளைய கமுகு)
**உயர்ந்தோங்கு** பெருவரை → உயர்தல் - ஓங்குதல் (மிக உயர்ந்த மலை)
**குழிந்து ஆழ்ந்த** கண் → குழிதல் - ஆழ்தல் (உள்ளடங்கிய கண்)

இவற்றுள் மீ, மிசை என்பன மேல் என்னும் ஒரு பொருளைத் தந்தன.

புனிறு, இளம் என்பன **இளமை** என்னும் ஒருபொருளைத் தந்தன.

நாகு, இளம் என்பன **இளமை** என்னும் ஒருபொருளைத் தந்தன.

உயர்ந்து, ஓங்கு என்பன **உயர்தல்** என்னும் ஒருபொருளைத் தந்தன.

குழிந்து, ஆழ்ந்த என்பன **உள்ளடங்கிய** என்னும் ஒருபொருளைத் தந்தன.

Scanned with CamScanner

## முற்றும்மை வரும் இடங்கள் [ 2 ]

399. இனைத்துஎன்று அறிபொருள்[1] உலகின் இலாப்பொருள்[2]
வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்.

[இ-ள்] 1. இத்துணைத்து என்று வரையறுத்து கூறப்படும் பொருள் 2. எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருள் ஆகியவற்றை முடிக்கும் சொல்லொடு சேர்த்துக் கூறுகின்ற பொழுது முற்றும்மை கொடுத்து முடிக்க வேண்டும். [எ-டு]

1. (அ) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்
(ஆ) இரண்டு கண்ணும் துடித்தன

இவற்றுள் மூவேந்தர், இரண்டு கண் என்பன தொகை வரையறுக்கப்பட்ட பொருள்கள்.

2. முயற்கோடு, ஆகாயப்பூ என்றும் இல்லை.

இவை உலகில் இல்லாத பொருள்கள் ஆதலின் முற்றும்மையைப் பெற்றன.

உலகினிலாப்பொருள் என்னும் தொடரை நிலாப் (நில்லாத) பொருள் எனவும் பிரித்துப் பொருள் காணலாம். இவ்விடத்து எச்சவும்மை கொடுக்க வேண்டும்.

செல்வமும் நில்லாது. இது இளமை நிலையாது, யாக்கை நிலையாது என்பதை வெளிப்படுத்தியது.

### உம்மை மறைந்தும் வருதல்

இரு தோள் தோழர் பற்ற என்னும் தொடரில் தோள் (தோளையும்) என்பதில் உம் மறைந்து நின்றது.

வினையன்றிப் பெயர் கொண்டும் முடியினும் உம்மை பெறுதல்

காது இரண்டும் செவிடு; எருது இரண்டும் கிழம்.

### செயப்படுபொருளைச் செய்ததாகக் கூறுதல்

400. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே.

[இ-ள்] செயப்படுபொருளைக் கருத்தாவைப் போல வைத்து அதன் மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும் உலக வழக்கிற்கு உரியதாம். [எ-டு]

இம்மாடு யான் கொண்டது (இம்மாட்டை யான் கொண்டேன்)
இச்சோறு யான் கொடுத்தது (இச்சோற்றை யான் கொடுத்தேன்)
இவ்வெழுத்து யான் எழுதியது (இவ்வெழுத்தை நான் எழுதினேன்)
இம்மாட்டை யான்கொண்டேன் - இதில் மாடு செயப்படுபொருள்.

இம்மாடு என்பது எழுவாயாய் நின்று கொண்டது என்னும் பயனிலைப் பெற்றது.



செயப்படுபொருளே அன்றிப் பிறவும் கருத்தாவாக அமையும்.

இவ்வெழுத்தாணி யான் எழுதியது (எழுத்தாணி - கருவி)
இவ்வீடு யான் இருந்தது (வீடு - நிலம்)
இத்தொழில் அவன் செய்தது (தொழில் - செயல்)
இந்நாள் அவன் பிறந்தது (நாள் - காலம்)

செயப்படுபொருளும் பிறவும் கருத்தாவாகக் கூறப்படுதல் வழுவாயினும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### அடைமொழி

401. பொருள்முதல் ஆறாம் அடைசேர் மொழி;இனம்
உள்ளவும் இல்லவும் ஆம்;இரு வழக்கினும்.

[இ-ள்] பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறாகிய அடைகள் அடுத்து வரும் மொழிகள் உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் வரும். அவை இனம் உள்ளவை, இனம் அற்றவை என இருவகையாய் நிற்கும். [எ-டு]

### உலக வழக்கு

| இனம் உள்ளன | | | இனம் இல்லன |
|---|---|---|---|
| நெய்க்குடம் | - பால்குடம் | → பொருள் | ← உப்பளம் |
| குளநெல் | - வயல் நெல் | → இடம் | ← ஊர்மன்று |
| கார்த்திகை விளக்கு | - தை விளக்கு | → காலம் | ← நாளரும்பு |
| பூ மரம் | - காய்மரம் | → சினை | ← இலைமரம் |
| செந்தாமரை | - வெண்டாமரை | → குணம் | ← செம்போத்து |
| ஊன்றுகோல் | - ஊதுகோல் | → தொழில் | ← தோய்தயிர் |

இனமுள்ள பொருள் முதல் ஆறும் அடை பெற்று வந்தன. நெய்க்குடம் - பாற்குடம் என அடையுடன் கூற வேண்டும். அவ்வாறு அல்லாமல் குடம் என அடையின்றிக் கூறினால் எது என்ற ஐயம் ஏற்படும். எனவே இனமுள்ளவற்றிற்கு அடை கொடுத்தலே முறையாகும்.

### செய்யுள் வழக்கு

| இனம் உள்ளன | | | இனம் இல்லன |
|---|---|---|---|
| பொருட் பெண் → | பொருள் | ← | பொற்கோட்டு இமயம் |
| கான்யாறு → | இடம் | ← | வடவேங்கடம் |
| முந்நாட்பிறை → | காலம் | ← | வேனிற்கோங்கு |
| கலவ மாமயில் → | சினை | ← | சிறகர் வண்டு |
| பெரும்பழம் → | குணம் | ← | செஞ்ஞாயிறு |
| ஆடரவு → | தொழில் | ← | முழங்கு கடல் |

இனமுள்ளவற்றிற்கு அடைகொடுத்தல் → வழாநிலை
இனமில்லாததற்கு அடைகொடுத்தல் → வழுவமைதி.

Scanned with CamScanner

### அடை மொழிகளுக்கு வழுவமைதி

*402. அடைமொழி இனம்அல் லதும்தரு ஆண்டுஉறின்.*

[இ-ள்] மேற்கூறப்பட்ட அடைமொழிகள் இனத்தைத் தருதலே அல்லாமல் பொருந்துகின்ற இடத்து இனமல்லாததையும் தரும். [எ-டு]

பாவம் செய்தால் நரகம் புகுவான் என்னும் தொடர்
புண்ணியம் செய்தால் சுவர்க்கம் புகுவான் என்னும்

இனத்தைத் தந்தது- அத்துடன்

பாவம் செய்பவன் இது செய்தால் இது வரும் என்னும்
அறிவில்லாதவன் என்று இனமல்லாததையும் தந்தது.

மேலைச்சேரிச் சேவல் அலைத்தது → அடைமொழி
கீழைச்சேரிச் சேவல் அலைப்புண்டது → இனமொழி
மேலைச்சேரியார்க்கு வெற்றி ஆயிற்று → இனமல்லாததைத் தருதல்.

### அடை, சினை, முதல்கள் ஒன்றை ஒன்று சிறப்பித்தல்

*403. அடைசினை முதல்முறை அடைதலும்[1] ஈர்அடை*
*முதலோடு ஆதலும்[2] வழக்கியல்; ஈர்அடை*
*சினையொடு செறிதலும்[3] மயங்கலும்[4] செய்யுட்கே.*

[இ-ள்] 1. ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலும் ஒன்றை ஒன்று சிறப்பித்து வரும் 2. இரண்டு அடைகள் ஒரு முதலைச் சிறப்பித்தும் வரும். இவை உலக வழக்காகும் 3. இரண்டு அடைமொழிகள் ஒரு சினைப் பொருளைச் சிறப்பித்து வருதல் 4. இம்முறை மயங்கி வருதல் செய்யுள் வழக்காகும். [எ-டு]

**உலக வழக்கு**

1. வேற்கை முருகன் - வேல், கை, முருகன் → ஓர் அடை, சினை, முதல்
   செங்கால்நாரை - செம்மை, கால், நாரை → ஓர் அடை, சினை, முதல்
2. மனைச்சிறு கிணறு-மனை, சிறுமை, கிணறு → ஈர் அடை, ஒரு முதல்
   சிறுகருங் காக்கை - சிறுமை, கருமை, காக்கை → ஈர் அடை, ஒரு முதல்

**செய்யுள் வழக்கு**

3. சிறுபைந் தூவி → சிறுமை, பசுமை, தூவி → ஈர் அடை, ஒரு சினை
   கருநெடுங் கண் → கருமை, நெடுமை, கண் → ஈர் அடை, ஒரு சினை
4. பெருந்தோள் சிறுமருங்குல் பேரமர்க்கண் பேதை
   சிறுநுதல் பேரமர்க்கண் செய்யவாய் ஐய நுண்ணிடையாய்.

இச்செய்யுள் வழக்குகளில் ஒவ்வொரு சினையும் அடைபெற்று முறை மயங்கி வந்தன.

மேற்கூறப்பட்ட நான்கனுள் அடை சினை முதல் என நிற்றல் ஒன்றே வழாநிலை. பிற வழுவமைதி.



## இயற்கைப் பொருள் - செயற்கைப் பொருள்

உலகப் பொருள்களை இரண்டு வகைப்படுத்தலாம். 1.இயற்கைப் பொருள் 2.செயற்கைப் பொருள் என்பனவாம். அவை பின் தோன்றாமல் தான் தோன்றிய போதே உடன் தோன்றிய தனக்குப் உடையது. அதாவது மாறுபடாத் தன்மை கொண்டது இயற்கைப் பொருள். தனக்குப் பின் தோன்றிய தன்மை உடையது. அதாவது மாறுபடுவது செயற்கைப் பொருள்.

### இயற்கைப் பொருளைக் கூறும்முறை

*404. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.*

[இ-ள்] இயற்கையாய் உள்ள பொருள்களை இன்ன தன்மை உடையதெனக் கூற வேண்டும். [எ-டு]

நிலம் வலிது; நீர் தண்ணிது; வளி வீசும்; தீ வெய்து; மயிர் கரிது; பயிர் பசியது.

### செயற்கைப் பொருளைக் கூறும் முறை [4]

*405. காரண முதலா ஆக்கம் பெற்றும்[1]*
*காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்[2]*
*ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்[3]*
*இருமையும் இன்றியும் இயலும்[4] செயும்பொருள்.*

[இ-ள்] 1. காரணச் சொல் முன்னும் ஆக்கச் சொல் பின்னும் வரக் கூறுதல் 2. காரணச் சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் மட்டும் வரப் பெறுதல் 3. ஆக்கச் சொல் மறைந்து நிற்கக் காரணச் சொல் மட்டும் வரப் பெறுதல் 4. ஆக்கமும் காரணமும் மறைந்து வருதல் என்னும் நான்கு முறைகளில் செயற்கைப் பொருள்கள் கூறப்பெறும்.[எ-டு]

1. கைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர் நல்லவாயின.
   எண்ணெய் பெற்றமை - காரணம் (முன் வந்தது)
   ஆயின - ஆக்கம் (பின் வந்தது)
2. பயிர் நல்லவாயின
   மயிர் நல்லவாயின } ஆக்கச்சொல் மட்டும் வந்தது
3. கைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர்நல்ல
   எருப் பெய்தமையால் பயிர் நல்ல } காரணம் மட்டும் வந்தது
4. பயிர் நல்ல
   மயிர் நல்ல } ஆக்கமும் காரணமும் மறைந்து நின்றன

இவற்றுள் முதல் ஒன்றே வழாநிலை; பின் மூன்றும் வழுவமைதி.

Scanned with CamScanner

**வணிகம் விடை கூறும் முறை [2]**

406. தம்பால் இல்லது இல்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும்[1] உள்ளது
சுட்டியும் உரைப்பர்[2] சொல்சுருங் குதற்கே.

[இ-ள்] தம்மிடத்துக் கேட்ட பொருள் இல்லையெனச் சொல்ல நேர்ந்த விடத்து 1. இனமாய்த் தம்மிடத்து உள்ள பொருளைக் கூறி வினவியதை இல்லை எனக் கூறுதல் 2. உள்ள பொருளாயின் இவ்வளவு உண்டென்று சுட்டிக் கூறுதல் ஆகியவை வினாவிடைச் சொற்சுருங்கக் கூறும் முறையாகும். [எ-டு]

1. பயறு உள்ளதோ வணிகரே? என்று கேட்டவரிடம் உளுந்து உண்டு. உளுந்தும் துவரையும் உண்டு எனக் கூறுவர் வணிகர்.

   இவ்விடை பயறில்லை என்பதை உணர்த்தியதோடு இனமான பிறவற்றை வினவிச் சொல்லுதலைக் குறைத்தது.

2. பயறு உளவோ என்று கேட்டவரிடம் இருபது கலம் உள்ளது எனக் கூறுவர்.

இவ்வாறு அளவு கூறுதல் பயறு உள்ளது என்பதைக் குறித்ததோடு எவ்வளவு என்ற வினாவைக் கேட்டு விடையிறுத்தலைக் குறைத்தது.

**ஈ, தா, கொடு என்னும் சொற்கள் [3]**

407. ஈ[1]தா[2] கொடு[3]எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை.

[இ-ள்]1. ஈ 2. தா 3. கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தவன், ஒப்பவன், உயர்ந்தவன் என்னும் மூவரும் இரத்தலுக்குப் (ஒன்றைக் கேட்டுப் பெறுவதற்குப்) பயன்படுத்தும் சொற்களாகும்.

| | |
|---|---|
| இழிந்தவன் தன்னின் உயர்ந்தவனிடத்து இரத்தல் | → ஈ |
| தன்னின் ஒத்தவனிடம் கேட்டல் | → தா |
| உயர்ந்தவன் தன்னின் இழிந்தவனிடம் கேட்டல் | → கொடு |

[எ-டு]

| | |
|---|---|
| ஆசிரியரே! ஈ | → இழிந்தோன் இரப்பு |
| தோழா! தா | → ஒப்போன் இரப்பு |
| மாணவ! கொடு | → உயர்ந்தோன் இரப்பு |

இந்நூற்பா (ஈ - இழிந்தோன்; தா - ஒப்போன்; கொடு - உயர்ந்தோன்) நிரல்நிறைப் பொருள்கோள்.



**குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள்**

408. முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே.

[இ-ள்] வெளிப்படையாக அன்றிக் குறிப்பினால் பொருள் உணர்த்துகின்ற சொற்களும் உண்டு.

அவை ஒன்றொழி பொதுச்சொல் முதலாக இன்ன பிறவும் எனக் கூறப்பட்ட அனைத்தும் (பெயரியல் நூ - 269) ஆகும். [எ-டு] குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்.

இத்தொடர் கோழி எறிதலாகிய வெளிப்படைத் தொழிலை முதன்மைப் படுத்தவில்லை மாறாகப் பெரிய செல்வத்தினை உடையவர் என்பதைக் குறிப்பால் உணர்த்தியது.

வெளிப்படையாக விளங்கச் சொல்லுதல் மரபுவழாநிலை. குறிப்பால் உணர்த்துதல் வழுவமைதியாகும்.

**அஃறிணையை உயர்திணை போலக் கூறுதல் [4]**

409. கேட்குந போலவும்[1] கிளக்குந போலவும்[2]
இயக்குந போலவும்[3] இயற்றுந போலவும்[4]
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.

[இ-ள்] 1. கேளாத பொருள்களைக் கேட்பன போலவும் 2. பேசாதவற்றைப் பேசுவன போலவும் 3. நடக்காதவற்றை நடப்பன போலவும் 4. இவையல்லாத பிற தொழில்கள் செய்யாதவற்றைச் செய்வன போலச் சொல்லுதலும் அஃறிணையிடத்து உயர்திணைப் போல வைத்துச் சொல்லப்படும். [எ-டு].

| | |
|---|---|
| 1. நன்னீரை வாழி அனிச்சமே | கேளாத அனிச்ச மலரிடம் கேட்பது போலக் கூறுதல் |
| 2. பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் | பேசாத கண்ணைப் பேசுவது போலக் கூறுதல் |
| 3. இவ்வழி அவ்வூர்க்குப் போகும் | நடக்கும் தன்மையற்ற வழியை நடப்பது போலக் கூறுதல் |
| 4. தன் நெஞ்சே தன்னைச் சுடும் | சுடாத நெஞ்சத்தைச் சுடுவது போலக் கூறுதல் |

அஃறிணைப் பொருள் உயர்திணைப் பண்புகளைப் பெற்றிருப்பது போலக் கூறுதல் வழுவமைதி ஆகும்.

Scanned with CamScanner

### உருவகம், உவமை அணிகளில் திணைகள் மாறிவருதல்

410. உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

[இ-ள்]உருவக அணியிலும் உவமை அணியிலும் உயர்திணை, அஃறிணைகளும் முதலும் சினையும் தம்முள் மாறி வரும். இவ்வியலுள் சொல்லாதவற்றையும் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். [எ-டு]

**உருவகம்**

1. அரசராகிய அரிக்குப் பகைவராகிய யானைகள் அஞ்சின.
   அரசர் - சிங்கம்; பகைவர் - யானை } உயர்திணையுடன் அஃறிணை மயங்குதல்
2. கடல் உடுத்த நில மடந்தை
   நிலம் - மடந்தை → அஃறிணை, உயர்திணையுடன் மயங்குதல்
3. என் தம்பியர் இருவரும் என் இருதோள்கள்
   தம்பியர் - தோள்கள் → உயர்திணை முதலுடன் அஃறிணை சினை மயங்குதல்
4. முகமாகிய மதி
   முகம்-மதி→உயர்திணைச்சினை, அஃறிணை முதலுடன் மயங்குதல்.

**உவமை**

மயில் போலும் மங்கை → உயர்திணை முதல், அஃறிணை முதலுடன் மயங்குதல்

கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே → உயர்திணை முதலுடன் அஃறிணை மயங்குதல்

கயல் போலும் கண் → அஃறிணை முதல், உயர்திணைச் சினையுடன் மயங்குதல்

தளிர் போலும் மேனி → அஃறிணைச் சினை, உயர்திணை முதலுடன் மயங்குதல்

பிற வகையிலும் மயங்கக் கூடியனவும் உள.

இவன் கலைமகளுக்கு ஒப்பானவன் → பால் மயங்குதல்

செங்கோல், வீரக்கழல் } ஒரு பொருளின் தன்மையை மற்றொன்றின் மீது ஏற்றிக் கூறுதல்.

ஈந்தான் - அருளினான் → ஒரு வினையை மற்றொரு வினையால் கூறுதல்

அரசு, வேந்து, அமைச்சு, தூது, ஒற்று } உயர்திணையை அஃறிணையாகக் கூறுதல்.



## பொருள்கோள் (MODES OF CONSTRUCTING VERSES)

தொடைநயம் நோக்கிக் கோவையாக்கப்பட்ட சொற்களின் கூட்டமே செய்யுள். இதில் சொற்கள் உரைநடையில் வருவது போல நேரே வருவதும் உண்டு. மாறி வருவதும் உண்டு. பொருள் செல்லும் தன்மைக்கேற்பச் சொற்களைப் பொருள் கொள்ளுகின்ற முறையே பொருள்கோள் எனப்படும். பொருள்கோள் நான்கு வகைப்படும் என்பார் தொல்காப்பியர். ஒன்பது என்பார் யாப்பருங்கலக் காரிகை உரைகாரர். ஆனால் நன்னூலார் எட்டாகப் பாகுபடுத்தியுள்ளார்.

### பொருள்கோள்களின் பெயரும் தொகையும் [8]

411. யாற்றுநீர்[1] மொழிமாற்று[2] நிரல்நிறை[3] விற்பூண்[4]
தாப்பிசை[5] அளைமறி பாப்புக்[6] கொண்டுகூட்டு[7]
அடிமறி மாற்று[8] எனப் பொருள்கோள் எட்டே.

[இ-ள்] பொருள்கோள் 1. யாற்றுநீர்ப் பொருள்கோள் 2. மொழி மாற்றுப் பொருள்கோள் 3. நிரல்நிறைப் பொருள்கோள் 4. பூட்டுவில் பொருள்கோள் 7. கொண்டு கூட்டுப் பொருள்கோள் 8. அடிமறி மாற்றுப் பொருள்கோள் என எட்டு வகைப்படும்.

### யாற்றுநீர்ப் பொருள்கோள்

412. மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்றுஅற்று ஒழுகும்அஃது யாற்றுப் புனலே.

[இ-ள்] மொழிமாற்றுப் பொருள்கோள் முதலிய பிற பொருள்கோள்களைப் போல மாறிச் செல்ல (சொற்கள் முன் பின்னாக மாற்ற) வேண்டாமல் ஆற்று நீரின் ஓட்டத்தைப் போல அடி தொறும் சிறந்த பொருள் அமைந்து தொடர்ந்து நடப்பது யாற்றுநீர்ப் பொருள்கோளாகும். [எ-டு]

சொல்அரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

இப்பாடல் ஏமாங்கத நாட்டு நெற்பயிரின் செழிப்பைக் கூறுகிறது.

சொல்லுதற்கு அருமைப்பாடு வாய்ந்த கருவுற்ற பச்சைப் பாம்பினைப் போல நெற்பயிரின் சூல் கொண்ட வடிவம் அமைந்திருந்தது. கல்வியறிவற்றுச் செல்வச் செருக்குள்ள வணங்காத் தன்மை கொண்ட கீழ்மக்களைப் போன்று ஈன்ற கதிர் நிமிர்ந்து நின்றது. மெய்ப்பொருளை ஆராய்ந்து கற்ற சான்றோர்கள் தலைவணங்கி நிற்பதைப் போலக் கதிர்கள் வளைந்து மிகுதியாக விளைந்திருந்தன என்பது இதன் பொருளாகும்.

Scanned with CamScanner

இப்பாடலில் சொல் (நெல்) என்பது எழுவாயாகும். அது இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என வினையெச்சங்கள் கொள்ள நின்றது. பின் காய்த்த என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

ஒரு திசையை நோக்கி இடையறவு படாமல் ஓடுவது ஆற்றுநீர், அதைப்போலச் செய்யுளில் சொற்கள் கிடக்கும் முறையில் அப்படியே பொருள் கொள்ள அமைந்திருப்பதே யாற்றுநீர்ப் பொருள்கோளாகும். இது உவமையால் அமைந்த பெயராகும்.

இவ்வாறு அன்றி ஒவ்வொரு அடியிலும் பொருள் முடிந்து வருவது இப்பொருள்கோள் எனவும் கூறுவர். அது பொருந்தாது ஆகும்.

**மொழிமாற்றுப் பொருள்கோள்**

413. *ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை*
*மாற்றிஓர் அடியுள் வழங்கல்மொழி மாற்றே.*

[இ-ள்] ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தத் தக்க சொற்களைத் தனித்தனிக் கூட்டி ஓர் அடியுள்ளே சொல்வது மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும் [எ-டு]

*சுரைஆழ அம்மி மிதப்ப வரையனைய*
*யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப*
*கானக நாடன் சுனை.*

இப்பாடலில் அமைந்த பொருள்களின் பயனிலைகள் பொருத்தமின்றி நின்றன.

முதல் அடியில் உள்ள சுரை என்ற எழுவாய் ஆழ என்னும் பயனிலையை அம்மிக்குக் கொடுத்தது. அதற்குரிய **மிதப்ப** என்னும் பயனிலையைத் தான் பெற்றது. அது போல யானைக்கு நிலை, முயற்கு நீத்து என்பனவும் நின்று மொழிமாற்றாயின.

ஓரடிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமுற மாற்றியமைத்துப் பொருளைத் தெளிவதே மொழிமாற்று. இதனைச் சங்கரநமச்சிவாயர், தன்னிடம் உள்ள ஒன்றைக் கொடுத்துப் பிறரிடம் ஒன்றை வாங்குகின்ற பண்ட மாற்றைப் போன்றது என்று கூறுகிறார்.

**நிரல்நிறைப் பொருள்கோள்**

414. பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
வேறுநிரல் நிறீஇ முறையினும்[1] எதிரினும்[2]
நேரும் பொருள்கோள் நிரல்நிறை நெறியே.

[இ-ள்] பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரு சொற்களையும் அவை கொண்டு முடிகின்ற பயனிலைகளையும் வேறு வேறாக வரிசைப் பட நிறுத்தி 1. முறையாகவோ 2. முறை மாற்றியோ இதற்கு இது பயனிலை என்பது தோன்றுமாறு கூறுவது நிரல்நிறைப் பொருள்கோளாகும்.



1. சொற்களை முறையாக வரிசைப்பட நிறுத்துவது முறை நிரல்நிறை
2. முறைமாற்றி நிறுத்துவது எதிர் நிரல்நிறை

இவை 1.பெயர் நிரல்நிறை 2. வினை நிரல்நிறை என இருவகைப்படும்.

**பெயர் முறை நிரல்நிறை**

1. பெயர்ச்சொல் எழுவாய், பயனிலையாய் நிற்றல். [எ-டு]

கொடி[1] குவளை[2] கொட்டை[3] நுசுப்பு[1] உண்கண்[2] மேனி[3]

இத்தொடரில் கொடி - இடை; குவளை - கண்; கொட்டை - மேனி எனப் பெயர் எழுவாய், பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிந்தன.

2. வினைச்சொல் எழுவாய், பயனிலையாய் நிற்றல். [எ-டு]

மாசு[1] போகவும் காய்பசி நீங்கவும்[2]

கடிபுனல் மூழ்கி[1] அடிசில்கைதொட்டு[2]

இத்தொடரில் போக என்பதற்கு மூழ்குதல்; நீங்க என்பதற்குத் தொடுதல் என்னும் வினையாகிய எழுவாய் வினைப்பயனிலையைக் கொண்டு முடிந்தன.

**பெயர் எதிர் நிரல்நிறை**

எழுவாயை வரிசைப்படுத்திப் பயனிலைகளை மாற்றியமைத்தல். [எ-டு]

களிறும்[1] கந்தும்[2] போல நளிகடல்

கூம்பும்[2] கலனும்[1] தோன்றும்

இத்தொடரில் களிறு - கலம்; கந்து - கூம்பு எனப் பெயர்கள் முறைமாற்றி நிறுத்திப் பொருள் கொள்ளப்பட்டன.

**பூட்டுவில் பொருள்கோள்**

415. *எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்*
பொருள்நோக்கு உடையது பூட்டுவில் ஆகும்.

[இ-ள்] ஒரு செய்யுளின் முதலிலும் ஈற்றிலும் நிற்கின்ற சொற்கள் தமக்குள் பொருள் நோக்குடையதாக அமைவது பூட்டுவில் பொருள் கோளாகும்.

வில்லின் ஒரு முனையில் பூட்டிய கயிற்றை (நாண்) மறுமுனையில் இழுத்து முடிவர். அதைப்போல இறுதிச்சொல்லை முதற்சொல்லோடு இயைத்துப் பொருள் கொள்வதே இப்பொருள்கோளாகும். [எ-டு]

Scanned with CamScanner

*திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்*
*இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர்கோன்*
*தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்*
*கண்ணாரக் காணக் கதவு.*

இச்செய்யுளில் ஈற்றுச் சீர் - கதவு; முதற்சீர் - திறந்திடுமின். கதவு என்னும் எழுவாய் திறந்திடுமின் என்னும் பயனிலையைக் கொண்டு பொருள் தெளியப்பட்டதால் இப்பொருள்கோள் ஆயிற்று.

பூட்டுவில் என்பது உவமையால் அமைந்த பெயராகும்.

**தாப்பிசைப் பொருள்கோள்**

416. *இடைநிலை மொழியே ஏனைஈர் இடத்தும்*
*நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை.*

[இ-ள்] ஒரு செய்யுளின் நடுவில் நிற்கின்ற சொல்லானது அச்செய்யுளின் முதலிலும் இறுதியிலும் சென்று பொருளைக் கூடுவது தாப்பிசைப் பொருள்கோளாகும்.

தாம்பு + இசை → தாப்பிசை (தாம்பு - கயிறு; இசை - சொல்)

தற்காலத்தில் தாம்புக்கயிறு என இருபெயரொட்டாக வழங்கப்படுகிறது. தாம்பால் அமைவது ஊசல் (ஊஞ்சல்)

ஊசலானது, நடுநின்று முன்னும் பின்னும் செல்லும் தன்மை கொண்டது. அதுபோலச் செய்யுளின் இடை நின்ற சொல் முன்னும் பின்னும் சென்று பொருளைக் கூடுவது இப்பொருள்கோளாகும் [எ-டு]

*உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண*
*அண்ணாத்தல் செய்யாது அளறு.*

இக்குறளின் நடுவில் உள்ள ஊன் என்னும் சொல்

*ஊன் உண்ணாமை உள்ளது எனவும்*
*ஊன் உண்ண அண்ணாத்தல் எனவும்*

இருபுறமும் சென்று பொருந்தி நின்று பொருள் தந்தது. இதனை அணி இலக்கண நூலார் இடைநிலைத் தீவக அணி என்றும் கூறுவர்.

தாப்பிசை என்பது உவமையால் அமைந்த பெயராகும்.

**அளைமறிபாப்புப் பொருள்கோள்**

417. *செய்யுள் இறுதி மொழிஇடை முதலினும்*
*எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே.*

[இ-ள்] செய்யுளின் ஈற்றில் நின்ற சொல் நடுவிலும் அதன்பின் முதலிலும் சென்று இயைந்து பொருள் கொள்வது அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆகும்.



பாம்பு என்னும் சொல் பாப்பு என வலித்தல் விகாரமாயிற்று. புற்றுக்குள் நுழையும் பாம்பு அப்போதே மடங்கித் தலையை முன்னாக வைத்து உடலைப் புற்றுக்குள் இழுக்கும். அதுபோல் செய்யுளின் ஈற்றில் நிற்கும் சொல்லேனும் அடியேனும் பிற அடிகளோடு சென்று பொருந்தப் பொருளை வெளிப்படுத்துவது இப்பொருள்கோளாகும். [எ-டு]

*தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து*
*தண்டூன்றித் தளர்வார் தாமும்*
*சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து*
*நாற்கதியில் கழல்வார் தாமும்*
*மூழ்ந்த பிணிநலிய முன்செய்த*
*வினையென்றே முனிவார் தாமும்*
*வாழ்ந்த பொழுதினே வானெய்து*
*நெறிமுன்னி முயலா தாரே.*

இச்செய்யுளின் ஈற்றடியான வாழ்ந்த .... தாரே என்பதைத் தாழ்ந்த .... தாமும், சூழ்ந்த .... தாமும், மூழ்ந்த ... தாமும் என்னும் 1, 2, 3 ஆம் அடிகளோடும் கூடிப் பொருள் கொள்ள நிற்றலின் இப்பொருள்கோள் ஆயிற்று.

அளைமறிபாப்பு என்பது உவமையால் அமைந்த பெயராகும்.

**கொண்டுகூட்டுப் பொருள்கோள்**

418. *யாப்புஅடி பலவினும் கோப்புடை மொழிகளை*
*ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே.*

[இ-ள்] செய்யுளின் அடிகள் பலவற்றினும் பொருத்தமின்றிக் கோக்கப்பட்டுக் கிடக்கும் சொற்களை மாற்றிப் பொருளுக்கு ஏற்ப எடுத்துக் கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்குப் பொருந்தக் கூட்டிப் பொருள் கொள்வதால் இப்பொருள்கோளாயிற்று. [எ-டு]

*தெங்கங்காய் போலத் திரண்டுஉருண்ட பைங்கூந்தல்*
*வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி*
*அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே*
*வங்கத்துச் சென்றார் வரின்.*

இதில் வங்கத்துச் சென்றார்வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் (உடைய) மாமேனி (மேல்) தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம் எனச் சொற்களைக் கூட்டிப் பொருள் காணவேண்டும். எனவே இது இப்பொருள்கோளாயிற்று.

கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது காரணத்தால் பெற்ற பெயராகும்.

Scanned with CamScanner

**அடிமறிமாற்றுப் பொருள்கோள்**

419. ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்[1]
யாப்புஈறு இடைமுதல் ஆக்கினும் பொருள்இசை
மாட்சியும் மாறா அடியவும்[2] அடிமறி.

[இ-ள்] 1. பொருளுக்கு ஏற்றவிடத்து எடுத்து நீங்காமல் கூட்டுகின்ற அடியை உடையன 2. செய்யுளில் அமைந்த யாதானும் ஓரடியை எடுத்து அச்செய்யுளின் இடை, நடு, முதல் இடங்களில் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும் பொருளும் ஓசையும் வேறுபடாத சிறப்பினை உடையன ஆகிய இரண்டும் அடிமறி மாற்றுப் பொருள்கோளாகும். [எ-டு]

1. பொருளுக்கு ஏற்பக் கூட்டும் அடிமாற்று
நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினைஉலந்தக் கால்.

இப்பாடலில்,

கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
விடுக்கும் வினைஉலந்தக் கால்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்

எனப் பொருளுக்கு ஏற்ப அடிகள் மாற்றிக் கொள்ளப்பட்டன.

2. பொருளும் ஓசையும் மாறா அடிமறிமாற்று
மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரல்ஆ னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே.

இப்பாடலில் அமைந்த அடிகளுள் எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமல் நின்றன.

**பொருள் மாறா அடிமாற்று**

அலைப்பான் பிறிதுஉயிரை ஆக்கலும் குற்றம்
விலைப்பாலிற் கொண்டுஊன் மிசைதலும் குற்றம்
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே யாம்.

இப்பாடலில் அமைந்த ஈற்றடியைக் கூட்ட ஓசை வேறுபடும். பிற அடிகளை முன்னும் பின்னும் மாற்றப் பொருளும் ஓசையும் மாறாமல் நின்றன.

Scanned with CamScanner